Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஆனி 14 ஆம் நாள் லபர் 16 (27-6-64) சனிக்கிழமை இதழ் 139

## இலங்கை-இந்திய நட்புறவுச்சங்கம்:

# இருநாட்டுமக்களின் உறவுகள் ஸ்திரமாகும்

## ஹைகமிஷனர் கப்பூர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், சனி

"இலங்கை-இந்திய பண்டைய தொடர்புகளை வளர்க்க இச்சங்கம் உதவும் என்று நம்புகின்றேன். இருநாடுகளின் கலாச்சாரம், சமயம், இனம் பண்பாட்டுத் தொடர்புகளின் வளர்ச்சிக்கு இச்சங்கம் அமைக்கப்படுவதே முறையான வழியென்று கருதுகின்றேன். இரு நாடுகளிடையே ஏற்படும் ஒற்றுமை; இலங்கை-இந்திய பொருளாதாரத்தையும் பெருக்க உதவக்கூடியதாகவிருக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்" என்று நேற்று மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் இலங்கை-இந்தியா நட்புறவுச் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கப்பூர் பேசுகையில் கூறினார்.

"பலநாடுகளின் நட்புறவுச்சங்கங்கள் நடைமுறையிலிருந்தும் இந்திய-இலங்கை நட்புறவுச் சங்கம் போன்று எச் சங்கமும் திறம்பட வளர்ச்சியடைய முடியாது. ஏனைய நாடுகளின் கலைகளுக்கும் பண்பாட்டுக்கும் இலங்கைப் பண்பாட்டிற்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. ஆனல் இலங்கையிலும் இந்தியாவிலும், கலாச்சார, சமய சமூக ஒற்றுமை இயற்கையாகவே நிலவுவதுடன் இந்தியாவில் ஆதியிலிருந்து வந்த பாஷை கூட இங்கு வழக்கிலிருந்து வந்தது. ஆகவே இச் சங்கம் மிக வெற்றிகரமாக ஆரம்பத்திலிருந்தே இயங்கிவரும்." என்றும் அவர் கூறினர்.

இக் கூட்டத்திற்கு முன்னைநாள் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரும் இச் சங்கத் தலைவருமான திரு ஹண்டி பேரின்பநாயகம் தலைமைவகித்தார்.

(10-ம் பக்ககம் பார்க்க)

## "இரும்புத்திரை' அகற்றப்பட வேண்டும்"

### சிவசிதம்பரம் கோரிக்கை

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

"நமது நாடும் இந்தியாவும் மொழி, கலாச்சாரம், பொருளாதாரம் ஆகியவற்ருல் ஒன்றுபட்டுத் தொடர்புகள் நெருங்கிக் கொண்டுவரும் சமயத்தில் சில அரசியல் கருத்துக்களால் இடைக்காலத்தில் தொடர்பு குறைந்து கொண்டே வந்தது. ஆகவே, இச்சமயத்தில் இப்படியானதொரு இலங்கை — இந்திய நட்புறவுச் சங்கமொன்றை ஆரம்பிக்க உத்தேசித்தோம். இந்தியா வாழ்ந்தால்தான் நம்நாடு வாழும்; நம்நாடு வளர வேண்டுமானல் இந்தியாவை நாம் ஒவ்வொரு விஷயத்திலும் ஆதரிக்க வேண்டும்.

(10-ம் பக்கம் பார்கக)

## சாஸ்திரிக்கு பிரதமர் கடிதம்

புதுடில்லி, ஜூன் 26

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னைபற்றிப் பேச தாங்கள் இருவரும்விரைவில்சந்திக்கவேண்டும் என இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா திரு. சாஸ்திரிக்குக் கடிதம் எழுதியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## யாழ். திறந்தவெளியரங்கில் நேரு பற்றிய படம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் இன்று இரவு 7மணியளவில் நேருஜியின் வாழ்க்கை பற்றிய திரைப்படம் இலவசமாகக் காண்பிக்கப்படவிருக்கிறது.

இந்திய ஹைகமிஷனும் யாழ்ப்பாண மாவட்ட தொழிலாளர் சபையும் ஏற்பாடு செய்திருக்கும் இத்திரைப்படக் காட்சி யாழ்ப்பாண மேயர் தலைமையில் நடைபெறும்.

## மின்சாரம் தாக்கி தொழிலாளி மரணம்

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் வேலைசெய்து கொண்டிருந்த ஒரு கம்பெனியைச் சேர்ந்த 3 தொழிலாளர்கள் மின்சார அதிர்ச்சியினல் தாக்குண்டனர். இதன் விளைவாக கதிரவேலு என்பவர் ஸ்தலத்திலேயே மரணமானர், மற்றுமிருவரும் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5-45-க்கு நிகழ்ந்தது.

## சி.பி.டி'சில்வா ராஜினுமா வதந்தி

கொழும்பு, வெள்ளி

திரு. சி. பி. டி' சில்வாவை கூட்டாட்சியிலிருந்து ராஜினுமா செய்விப்பதில் சிலர் முனைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

திரு. சி. பி. டி' சில்வா ராஜினுமா செய்யவேண்டுமென்று திரு. சி. பி. டி' சில்வாவின் ஆதரவாளர்கள் சிலர் அவரைப் பலவந்தபபடுத்திவருவதாகவும் கூறபபடுகின்து.

### கூட்டாட்சியும் பிலிப்பும்

கூட்டரசாங்கத்தில் திரு. பிலிப்குணவர்த்தனவைச்சேர்க்கும் முயற்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த சில எம். பி க்கள் தீவிரமாக ஈடுபட்டுவருவதாக அறியப்படுகிறது.

திரு. பிலிப்குணவர்த்தனவை கூட்டாட்சியில் சேர்ப்பதை ஆரம்பத்தில் எதிர்த்த குழுவினர், நேற்றிரவு இரகசியமாக கூட்டங்களை நடத்தி இதுசம்பந்தமாக ஆராய்ந்தனர்.

இதற்கிடையில் திரு. பிலிப் குணவர்த்தனவை அரசாங்கத்தில் சேர்ப்பது சம்பந்தமாக பிரதமருடன் பேச்சுக்கள் நடத்தவும் ஒரு பகுதியினர் முயற்சிமேற்கொண்டுவருகின்றனர். இருந்தபொழுதிலும் பிரதமர் ஸ்ரீமாவோபண்டாரநாயக்கா காமன்வெல்த் மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு அடுத்தமாதம் 8-ந் திகதி லண்டனுக்குச் செல்வதால் அவர் வந்த பின்னரே பேச்சுக்கள் நடைபெறும் என அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

## இன்று நடைபெறும் கம்பன் விழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

இலங்கைக் கம்பன் கழகத்தின் ஆதரவில் இன்று காலை 9மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் 'கம்பன் விழா' ஆரம்பமாகிறது.

எம். எஸ். சண்முகநாதன் குழுவினரின் மங்கல இசையுடன் ஆரம்பமாகும் காலை நிகழ்ச்சிகளுக்கு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. ஸி. தலைமைவகித்து உரை நிகழ்த்துவார். டாக்டர் செ. சிவஞானசுந்தரத்தின் வரவேற்புரைக்குப பின் வித்துவான் பொன். முத்துக்குமாரன் 'கம்பர் காட்டும் வாழ்வு' என்னும் பொருள்பற்றி சொற்

(10-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள் உறுதியாக இருப்பதற்கு திறமான

★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

விஷ்ணு ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரி மாணவர் பகுதி

Courses for (i) G. C E. Advanced Leval/University Preliminary Arts, 1964
(ii) G. A. Q. 1965.

மார்கழி, 1964 இல் நடைபெறும் கலைப்பகுதிப் பொதுக் கல்வித் தராதரப் பத்திர 'உயர்நிலை' பரீட்சை / பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை ஆகியவற்றிற்குத் தோன்ற விரும்பும் மாணவர்கள் இக்கல்லூரியில் தற்பொழுது சேரலாம். சேரவிரும்புவோர் 29-6-64 தொடக்கம் 4-7-64வரை நேரில் வந்து விண்ணப்பித்துக் கொள்ளவும்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பொதுக் கலைத்தகுதிகாண் பரீட்சைக்குரிய போதன வகுப்பு ஐப்பசி 1964 இல் ஆரம்பிக்கப்படும். விண்ணப்பங்கள் புரட்டாதி மாதத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். அதற்குரிய திட்டமான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை,
26-6-64.

618

# ஆஸ்பத்திரி மீதான கண்டனங்கள் நியாயமற்றவை

## ஆஸ்பத்திரிக் கமிட்டியின் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்களின் கவலையீனம்பற்றி நீதியரசர் கௌரவ டாக்டர் எச். டபிள்யு. தம்பையா இரு சம்பவங்களில் கண்டனம் தெரிவித்ததும் யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் ஒரு சம்பவத்தில் கண்டனம் தெரிவித்ததும் பற்றி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக் கமிட்டியின் வேண்டுதலின் பேரில் விசாரணை செய்து ஆஸ்பத்திரி அதிபர் டாக்டர் வி. சங்கரப்பிள்ளையின் அறிக்கையை ஏற்று அக் கண்டனங்கள் நியாயமானவையல்ல என ஆஸ்பத்திரிக் கமிட்டி தீர்மானித்தது.

சென்ற அசைஸ் செஷனில் ஒரு சாட்சி கோர்ட்டில் மயங்கிவிழுந்ததைத் தொடர்ந்து நீதியரசரினல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டிருந்தார். அவரை சிரேஷ்ட டாக்டர் பரிசோதனை செய்து ஆக வேண்டிய சிகிச்சைக்குப் பின் வார்ட்டில் அனுமதித்தார். அந்நேரத்தில் வைத்திய நிபுணர் அங்கு இருக்கவில்லையென்றும், மூன்று மணிக்கு வந்து முதலாவதாக இந்நோயாளியைக் கவனித்ததாகவும், ஓ. பி. டி. டாக்டரின் அபிப்பிராயம்போலவே அவரும் அபிப்பிராயம் தெரிவித்திருந்தாரென்றும், நோயாளி எவ்வித நோயுமற்றவராகவும், பலவீனம் மட்டும் இருந்ததால் வார்ட்டிலிருந்து அனுப்பப்பட்டாரென்றும் கமிட்டிக்கு அறிவிக்கப்பட்டது. மேலும் இந்நோயாளரைக் கவனித்தல் பற்றி எவ் உத்தியோகத்தராவது கவலையீனமாக இருக்கவில்லையென்றும் அறிவிக்கப்பட்டது.

இரண்டாவது சம்பவம் முன்னை நாள் சட்ட வைத்தியர் டாக்டர் ஏ. வைத்திலிங்கம் அசைஸகோர்ட்டில்காயப்பட்ட ஒருவரின் மரணம் குறித்துக் கொடுக்கப்பட்ட சாட்சியத்தில் டாக்டர் சேவியர் அனுபவத்தில் குறைந்தவரென்றும், தராதரத்தில் குறைந்தவரென்றும், அனுபவமிக்க சத்திர சிகிச்சை நிபுணர்கள் இருவர் இருந்த பொழுது அவர்களிருவருள் எவரையாவது தமது உதவிக்கு அழைத்திருப்பாரேயானல் காயப்பட்டவர் தப்பியிருக்கக் கூடும் என்றும் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்.

ஆஸ்பத்திரி அதிபரின் அறிக்கைப்படி டாக்டர் சேவியர் ஆரம்ப எப். ஆர். ஸி. எஸ். பரீட்சையில் சித்தி எய்தி உள்ளவரென்றும், ஆற்றலும் அனுபவமுமிக்கவரென்றும், சிகிச்சையில் எவ்வித பிழையும் விடுவதற்கு இடமேயில்லையென்றும், காயப்பட்டவரின் காயங்களிலொன்று மரணத்தைக் கட்டாயம் வருவிக்க வல்லதென்றும் எவ்விதச் சிகிச்சையும் அவரது உயிரைப் பாதுகாத்திருக்க முடியாதென்றும் அறிவிக்கப்பட்டது.

மூன்ருவதாக, மரண விசாரணை அதிகாரி ஆஸ்பத்திரி வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட பெண் வாங்கிலிருந்து விழுந்து இறந்ததாகவும், அது ஆஸ்பத்திரி உத்தியோகத்தரின் கவனயீனத்தால் ஏற்பட்டதென்றும் உத்தியோகத்தர்கள் கவனமாக இருந்திருந்தால் அப்பெண்ணின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம் என்றும் அபிப்பிராயம் தெரிவித்ததாகும்.

இப்பெண் இரத்தச் சோர்வினுல் பீடிக்கப்பட்டவரென்றும் அவருக்கு ஏற்பட்டிருந்த பலத்த சுகயீனத்திலுலும், அதனுல் ஏற்பட்ட பலவீனத்திலுலும் மரணம் சம்பவித்ததேயொழியவாங்கிலிருந்துவிழுந்ததினுலல்ல என அறிவிக்கப்பட்டது. மேலும் இப்பெண் அனுமதிக்கப்பட்ட வார்ட்டில் 42 படுக்கைகள் மட்டுமே உண்டு. ஆனுல் ஒரு பாய் விரித்து அதில் அப்பெண்ணைப் படுக்க வைக்கவே இடமில்லாத அளவிற்கு அளவுகருமிஞ்சி நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். அதனுலேயே அவருக்கு அந்நேரம் படுக்கை கொடுக்க முடியாமல் இருந்தது.

இச்சம்பவங்கள் மூன்றும் உத்தியோகத்தர்களின் கவனயீனத்தால் நடைபெறவில்லை என்பதில் தமக்குத் திருப்தி ஏற்பட்டுள்ளதாகவும் மூன்று கண்டனங்களும் நியாயமானவையல்ல என்றும் ஆஸ்பத்திரிக்கமிட்டியினுல் தீர்மானிக்கப்பட்டது.

# ஆஸ்பத்திரிக்கு அவசியம் தேவையான மருந்துகள்

## தனியார் ஸ்தாபனங்களிடம் பணம் கொடுத்து வாங்கப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரித் தேவைக்கு 18,500 ரூபாய்க்கு இங்கேயுள்ள மருந்துக் கடைகளில் மருந்து பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்படிக்கொள்வனவு செய்திருக்காவிடில் ஆஸ்பத்திரி மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும்.

இவ்விபரம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக் கமிட்டியின் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு திரு. எஸ். சி. கதிரவேலு தலைமைவகித்தார்.

இம்மாதம் கொழும்பு அரசினர் மத்திய மருந்துச்சாலைக்கு விண்ணப்பித்த 54 மருந்து வகைகளில் 21 தான் கிடைக்கக் கூடியதாயிருந்தது என்றும் நிலைமை இன்னும் பாதிக்கப்படக்கூடிய அளவிலேயே இருப்பதாகவும் கமிட்டிக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சை நிலையப் பகுதியில் நெருக்கடி வரவர அதிகரித்துக்கொண்டே போவதாகவும் யாழ்ப்பாண மாநகரசபை ஆஸ்பத்திரி வீதியையும் மின்சாரநிலைய வீதியையும் இணைக்கும் குறுக்கு ருேட்டை மூடி ஆஸ்பத்திரி விஸ்தரிப்புக்கு இடம் கொடுப்பதாகச் செய்த தீர்மானத்தை இப்பொழுது வாபஸ் பெற்றதால் சுகாதார இலாகாவுக்குப் பெரிய கஷ்டத்தைக் கொடுத்துள்ளதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மாநகரசபை 1959-ம் ஆண்டில் செய்துகொண்ட தீர்மானத்தைத் தொடர்ந்து மத்திய வெளிநோயாளர் பகுதிக் கட்டடம் அமைக்க மாதிரிப்படமும் வரையப்பட்டு மறு ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கும் சமயம் இவ்விதம் தடைப்பட்டதனுல் ஆஸ்பத்திரி நிர்வாகத்திற்கும் தலையிடி கொடுத்துள்ளதாக அறிவிக்கபபட்டது. நிபுணத்துவ வைத்திய கிளினிக்குகள் பல்வேறுபட்ட நிபுணர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்துள்ளதால் அவர்களின் சேவையை மக்களுக்குப் பயன்படுத்த ஆஸ்பத்திரியின் எல்லாப் பாகங்களில் இடம்கிடைத்த இடத்தில் ஒவ்வொரு கிளினிக் நிறுவப்பட்டது. ஒவ்வொரு கிளினிக்குக்குப் போவதாகச் சொல்லித் தேவையற்றோர் ஆஸ்பத்திரி வார்ட்டுகளிலும் ஏனைய பகுதிகளிலும் நடமாடுகிறார்கள். அதைககட்டுப்படுத்தும் விதம் தெரியாது நிர்வாகஸ்தர்கள் கஷ்டமுறுகிருர்கள். மாநகரசபை இடங்கொடுத்தால் அமைக்கப்படவிருந்த கட்டடத்தில் வெளிநோயாளர் பகுதியும் சகல கிளினிக்குகளும் அமைக்கும் திட்டமிருந்த பொழுது மனதில் கொண்ட நிம்மதி இப்பொழுது அற்றுப் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டது. இதைவிட பெண் நோயாளர் விடுதியின் அவசியம் பற்றியும் கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

## இலங்கைவரும் மாணவர் கோஷ்டி

கொழும்பு, வெள்ளி

ஸ்கொத்லாந்து பல்கலைக் கழக மாணவர் கோஷ்டியொன்று அடுத்த மாத முற்பகுதியில் இலங்கை வரவிருக்கிறது. 2 ஆண் பட்டதாரிகளும், 2 பெண் பட்டதாரிகளும்கொண்ட இக்கோஷ்டியின் விஜயம் பிரிட்டிஷ் கவுன்ஸிலின் ஆதரவில் ஒழுங்கு செய்யப்பட்டது. இவர்கள் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், அனுராதபுரம், வவனியா, பொலனறுவா, சிலாபம், பண்டாரவளை ஆகிய இடங்களுக்குச் சென்று இலங்கை மாணவர்களுடன் விவாத அரங்குகளில் கலந்துகொள்வர்.

## மகளிர் கல்லூரி விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

உடுப்பிட்டி மகளிர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் ஜூலை மாதம் 4-ம் திகதிநடைபெறவிருக்கின்றன. தென்மாகாண உதவி வித்தியாதிபதி திரு. எம். பி. நூர்தீன்பிரதம விருந்தினராககலந்கொள்வார். விளையாட்டுப் போட்டியில் ஒலிம்பிக் விளையாட்டுத்தீபமும், ஒலிம்பிக் அணிவகுப்பும் விசேஷ நிகழ்ச்சியாகளாக நடத்தப்படும்.


வரி விளம்பரம்

### தேவை

பலசரக்குக் கடை, புடவைக் கடை, சாப்புக் கடைகளில் 24 வருட வியாபார அனுபவம் உள்ளவருக்கு, மனேச்சர், கணக்கப்பிள்ளை அல்லது பில் கிளாக் வேலை தேவை. வேலைக்கு ஏற்ற படி சம்பளம் கோரப்படும். மேல்பார்த்து: ஈழநாடு. 545

### House To Let

Spacious house with drainage, flush lavatory, shower bath To-Let at 9, Somasundaram Avenue, Jaffna-Contact Peter. 538

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்
சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின் மென்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துவலி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்ல விசேஷ பாம், தயாரிப்பாளர்கள்:

GABRIELS, Chunnakam. 273

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணுநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

### தேவை

நல்ல அனுபவமுள்ள பங்களா சமையற்காரர் உடனே தேவை. மேல்நாட்டு உணவுகள் தயாரிப்பதில் மிகவும் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். குடாநாட்டு ஆள் விரும்பத்தக்கது. நேரில் சமூகமளிக்கவும். எட். ஸூப்பி ளின், காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, காங்கேசன் துறை. 546

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

'ராதா குருதைலம்'

தலையிடி, ஜலதோஷம், வாய்வுப்பிடிப்புகள், குழந்தைகளுக்கு ஏற்படும் சளியுடன் கூடிய காய்ச்சல், கபால இடி, வயிற்றுவலி, பல்வலி, விஷக்கடி, நெஞ்சுச்சளி, இருமல், வாதம், வலிப்பு, ஜன்னி மற்றும் அநேக வியாதிகளுக்கும் ஒரு சிறிதளவு அந்தந்த இடங்களில் தேய்த்த சில நிமிஷங்களுக்குள் ஆச்சரியப்படத்தக்க விதமாக நிவாரணம் கொடுக்கிறது.

எங்கும் கிடைக்கும்
ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய
அத்தியாவசியமான கைமருந்து.

ராதா குருதைலம் என்று கேட்டு வாங்குங்கள்.

தயாரிப்பவர்கள்:
"ராதா புரடக்ஸ்"

ஏகவிநியோகஸ்தர்கள்:

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்துகள், மருந்துச்சரக்கு, வாசனைத் திரவிய வியாபாரம்


58, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541

'பாலேந்திரா பில்டிங்' 160, செட்டியார் தெரு, கொழும்பு — 11.

### பிரசித்த ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் நாகேஸ்வரி இராசையா அவர்களினது வேலணை கிழக்கில் மூலாம், ஐந்தாம் வட்டாரங்களிலுள்ள இரு துண்டுக் காணிகளும் வயல் 95 பரப்பும் 20 பரப்பும் 1964ம் ஆண்டு ஆனி மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் ஏலத்தில் விற்கப்படும்.

எஸ். இரத்தினசபாபதி,
617 வெந்தீஸ்மேஸ்தர்.



S-lon

எஸ் - லொன்!
இன்றைய அதிசயமான பைப்

இதுவே ஒரு உண்மையான பல-பயன் தரும் பைப்.... திண்மையானது கனக்குறைவானது, மலிவானது, கையாள்வது சுலபம், உக்காது கறையான் அண்டாது, அரிப்பேற்படாது, கிருமி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது. எஸ்-லொன் மின்சார கொண்டுயிட் வேலை உட்பட பெரும்பாலான வீட்டு, கைத்தொழில், விவசாய உபயோகத்திற்கு சிறந்த ஒப்பற்ற பைப்.

பைப் வேலை, உங்களுக்கு உண்டானுல் அதற்கு உகந்த பைப் எஸ்லொன்தான் ஆகவே இன்றே எங்குமுள்ள சிறந்த ஸ்டோர்களில் அதைக் கேட்டு வாங்க நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.
மகாராஜா கட்டிடம்.
[illegible] வீதி, கொழும்பு-11.

மலேஷியா

# சிங்கப்பூருக்கு 10 மைலில் இந்தோனேஷிய படைகள்

## தாக்குதலுக்கு உத்தரவை எதிர் பார்த்து நிற்கின்றனவாம்

ஜாகர்த்தா, ஜூன் 26

[மலேஸியா, காமன்வெல்த் நாடுகளிலிருந்து ராணுவ உதவி பெற்ருல், இந்தோனேஷியாவும் வெளிநாடுகளிலிருந்து ராணுவ உதவி பெறும் என வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ கூறினுர்.

இதற்கிடையில் சிங்கப்பூருக்கு 10 மைல் தூரத்தில் பெருமளவு இந்தோனேஷியப் படைகள் மலேஷியாவில் இறங்க ஜனுதிபதி சுகர்ணோவின் கட்டளையை எதிர்பார்த்திருப்பதாயும் இந்தோனேஷிய வட்டாரங்கள் கூறின.

இந்தோனேஷியா பெருமளவில் ராணுவ நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அது உலக யுத்தமாய் மாறிவிடும் என மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் எச்சரித்தார்.

இந்தோனேஷியாவைப் பொறுத்தவரை டோக்கியோ மகாநாடு வெற்றிகரமாகவே முடிந்திருக்கிறதென்றும், மலேஷியாவை நசுக்க சுதந்திரத்துடன் செயல்பட மகாநாடு வழி வகுத்துவிட்டதென்றும் டாக்டர் சுகர்ணோ ஒரு கூட்டத்தில் கூறினுர்.

# மலேஸிய - இந்தோனேஷிய எல்லையில் பல சம்பவங்கள்

கோலாலம்பூர், ஜூன் 25

சரவாக் பகுதியிலுள்ள இந்தோனேஷிய—மலேசிய எல்லைகளில் பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ஒரு பகுதியில், இந்தோனேஷிய கொரில்லா துருப்புகளை மலேசிய துருப்புகள் பலவந்தமாக விரட்டி அடித்தனர் என்றும் இதன் விளைவாக ஏற்பட்ட தாக்குதலில் இரண்டு இந்தோனேஷிய கொரில்லாக்கள் கொல்லப்பட்டனர் என்றும் இருவர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தாக்கப்பட்ட இந்தோனேஷிய கொரில்லா கோஷ்டியினர் தங்களது இடத்தை விட்டு வாபஸாயினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் பிலிப்பைன்ஸ் அதிபர் மகபகால், மலேசிய பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மானுக்கு கடிதமொன்று அனுப்பியுள்ளார் என்று இங்கு வெளியான செய்தி ஒன்று கூறுகிறது. இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், மலேசியா வெளிவிவகார மந்திரிகள் மகாநாடொன்று மூன்று . வாரகாலத்துக்குள் நடைபெறக் கூடிய சாத்தியக் கூறுகள் பற்றி அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# சுப்ரமண்யம் செயல்திறன்: பிரதமர் சாஸ்திரி பாராட்டு

புதுடில்லி, ஜூன் 26

உணவு, விவசாய மந்திரி இலாகாவை திரு. சுப்பிரமண்யம் ஏற்றுக்கொண்ட செயலை பிரதமர் லால்பகதூர் பெரிதும் பாராட்டினுர்.

"இதற்குமுன் பெரிய இலாகாவை வெகு நன்ருக நிர்வகித்துவந்தார். உணவு, விவசாய இலாகாவை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னதும் தங்குதடையின்றி ஏற்றுக்கொண்டார். பெரும் கடமையை ஏற்றுக்கொண்டிருக்கிருர். அவரிடம் செயல் வேகமும், கடமை உணர்ச்சியும் இருப்பதால் அதை ஏற்கும்படி கேட்டுக்கொண்டேன். எனவே, நமக்கு முன்புள்ள மிகக் கஷ்டமான பணியில் நமது முழு ஒத்துழைப்பையும் அவருக்குத் தருவது மிக முக்கியம்" என்றும் பிரதம மந்திரி மேலும் கூறினுர்.

## இந்திய—நேபாள நேரடி டெலிபோன்

புதுடில்லி, ஜூன் 25

நேபாள-இந்திய நேரடித் தந்தி, டெலிபோன் தொடர்பு ஒப்பந்தமொன்று இன்று காலை புதுடில்லியில் கைச்சாத்திடப்பட்டது. இத்திட்டம் அடுத்த மாதம் அமுலுக்கு வரும்.

—

## 120 வயது முஸ்லிம் மரணம்

பிரிஸ்பேன், ஜூன் 26

120 வயதானவர் என்று சொல்லப்படும் அப்ரஹாம் முகம்மது என்ற முஸ்லிம் பிரிஸ்பேனில் காலமானுர். அவர் 1890-ல் இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியா வந்தார்.

# கெய்ரோவில் இந்திய உபஜனுதிபதி ஹுஸெய்ன்

## அலிசாப்ரியுடன் பேச்சு

கெய்ரோ, ஜூன் 26

இந்திய உப ஜனுதிபதி டாக்டர் ஸகீர் ஹுஸைன் நேற்று கெய்ரோவில் ஐக்கிய அராபியக் குடியரசுப் பிரதமர் அலி சாப்ரியுடன் பேச்சு நடத்தினுர். அப்போது கெய்ரோவிலுள்ள பாரத தூதரும் உடனிருந்தார்.

இதற்குமுன் டாக்டர் ஸகீர் ஹுஸைன் கெய்ரோ விமான நிலையத்தில் வந்திறங்கிய போது துணை அதிபர் அவரை வரவேற்ருர். அப்போது 21 பீரங்கிக் குண்டுகள் முழங்கின. மரியாதை அணிவகுப்பைப் பார்வையிட்டபின் உப ஜனுதிபதி விருந்தினர் மாளிகைக்குச் சென்ருர்.

டாக்டர் ஹுஸெய்ன் அல்ஜீரியா, டூனிஸியா, மொராகோக் ஆகிய நாடுகளுக்கு நல்லெண்ணப் பிரயாணத்தைமேற்கொள்கிருர்.

## வெள்ளத்தைத் தடுக்க ரூ. 83 கோடி

புதுடில்லி, ஜூன் 26

4-ம் ஐந்தாண்டுத்திட்டத்தில் வெள்ளக் கட்டுப்பாட்டுக்கு ரூ. 83 கோடி செலவிடப்படும் என அறிவிக்கப்பட்டது.

## இந்திரா யூகோ செல்கிருர்

பெல்கிரேட், ஜூன் 26

யூகோஸ்லேவியாவுக்கு வந்து ஓய்வெடுத்துக்கொள்ளுமாறு யோசனை தெரிவித்து ஜனுதிபதி டிட்டோ அனுப்பிய அழைப்பை ஸ்ரீமதி இந்திரா காந்தி ஏற்றுக்கொண்டதாக பெல்கிரேட்டில் அறிவிக்கப்பட்டது. யூகோ வெளிவிவகார மந்திரி திரு. ஸ்டாம்போலிக் சென்ற மாதம் டில்லி வந்தபோது ஸ்ரீமதி இந்திராவைச் சந்தித்து டிட்டோவின் அழைப்பை அவரிடம் ஒப்படைத்தார்.

—

## நவீன அரிசி மில்கள்

புதுடில்லி, ஜூன் 26

அரசாங்கத்துறையில் நவீன அரிசி மில்கள் பலவற்றைத் துவக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாயும், உடனடியாக இது பெரிய அளவில் ஆரம்பமாகும் என்றும் உணவு மந்திரி திரு. சுப்ரமண்யம் அறிவித்தார்.

ராஜ்ய முதன் மந்திரிகள் கூட்டத்தில் பேசியபோதே உணவுமந்திரி இவ்வாறு குறிப்பிட்டார். பிரதம மந்திரி திரு. சாஸ்திரி பேசியபோது மகாநாடு முடியுமுன் தெளிவான திட்டவட்டமான முடிவுகளைச் செய்யவேண்டும் எனக் கூறினுர்.

—

## சாஸ்திரிக்கு டாக்டர் பட்டம்

புதுடில்லி, ஜூன் 26

பிரதம மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரிக்கு பீகார் பல்கலைக் கழகம் "டாக்டர் ஆப் லிட்டரேச்சர்" என்ற கௌரவப்பட்டத்தை வழங்கியிருக்கிறது. பிரதமரின் வீட்டில் நடைபெற்ற சிறுவைபவத்தில் இந்தப்பட்டம்வழங்கப்பட்டது. பட்டமளிப்புக்கான ஆடைகளை திரு. சாஸ்திரி அப்போது அணிந்திருந்தார்.

—

## இந்தியா வரும் உல்லாசப்பிரயாணிகள்

புதுடில்லி, ஜூன் 26

இந்தியாவுக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளில் அமெரிக்கர்களும் கனடா தேசத்தவருமே அதிகமென்று மதிப்பிட்டுள்ளனர். கடந்த வருடத்தில் 39,000 அமெரிக்க உல்லாசப் பிரயாணிகள் இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளனர்.

—

## கம்யூனிஸ்ட் காரியதரிசி கைது

சென்னை, ஜூன் 25

கம்யூனிஸ்ட் கட்சியின் சென்னை ஜில்லா கவுன்சில் காரியதரிசியும் மற்றுமொருவரும் இன்று கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

பஸ்கட்டண உயர்வை எதிர்த்து கடந்த 22-ம் திகதி முதல் இவர்கள் உண்ணுவிரதம் மேற்கொண்டனர். இவர்கள் இருவருக்கும் 14 நாள் றிமாண்ட் விதிக்கப்பட்டுள்ளது.

—

## தொழிலாளர் கலகம்

டாக்கா, ஜூன் 26

கிழக்கு பாகிஸ்தானில் சணல் ஆலைத் தொழிலாளர்களில் இருபிரிவினர் ஒருவரையொருவர் தாக்கியதின் காரணமாக ஒருவர் மாண்டார் என்றும், 30 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

# புதிய உருவத்தில் காலனி ஆதிக்கம் தலையெடுக்கிறது

## இந்தோனேஷியவின் பார்லிமெண்டில் மிக்கோயன் கண்டனம்

ஜாகர்த்தா, ஜூன் 26

தென் கிழக்காசியாவில் தனது ராணுவ, கேந்திர தலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு புதுவகையான காலனியை அமைக்கும் முயற்சியில் பிரிட்டன் ஈடுபட்டுவருகிறது என முதலாவது சோவியத் உதவிப் பிரதமர் திரு. மிக்கோயன் இந்தோனேஷியப் பார்லிமெண்டில் பேசும்போது கூறினுர்.

"தனது துருப்புக்களையும், பணத்தையும், அதிகாரிகளையும்கொண்டு பிரிட்டன் மலேஷியாவை அமைத்திருப்பதன் மூலம் மலாய் மக்களின் உண்மையான சுதந்திரத்திற்கு ஊறு செய்திருக்கிறது.

"பிரிட்டனும், அமெரிக்காவும் தென் வியட்னும், மலேஷியா ஆகிய நாடுகளில் ஒன்றையொன்று ஆதரித்து நிற்கின்றன. எனவே நமது சோஷலிஸ்ட் நாடுகள், புதிதாகச் சுதந்திரம் பெற்றுவரும் நாடுகள், சகல தேசிய அரசாங்கங்கள், முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிற் சங்கங்கள் ஆகியன இந்தக் கூட்டு ஏகாதிபத்திய சக்திகளைச் சமாளிக்க ஐக்கியப்பட வேண்டும்" என்றும் மிக்கோயன் கூறினுர். சீனுவுடன் ரஷ்யாவுக்குள்ள வேற்றுமைகள் காலக்கிரமத்தில் தீரும் என நம்புவதாய் மிக்கோயன் கூறினுர்.

வட போர்னியோ மக்களைக் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கும் இந்தோனேஷிய முயற்சிக்கு ரஷ்யா ஆதரவு அளிக்குமென்றும் அவர் கூறினுர்.

# 60 வருடங்களுக்கு முன்பே "ரடார்" கண்டுபிடிப்பு

டஸல்டார்ப், ஜூன் 26

எதிரி விமானங்களின் நடமாட்டத்தைக் கண்டுபிடிக்க இன்று மிகவும் இன்றியமையாத சாதனமாகக் கருதப்படும் ராடார் சாதனம் உண்மையில் 60 வருடங்களுக்கு முன்பே கோலோன் என்ஜினியர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டது. பிற்காலத்தில் இது மாபெரும் சாதனமாக விளங்கப்போகிறது என்பது யாவரும் எதிர்பார்க்கவில்லை. இப்போது ராடார் சாதனத்தைக் கண்டு பிடித்ததாகக் கருதப்படும் ஸர் வாட்ஸன் வாட் அந்த என்ஜினியரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கக்கூட மாட்டார்.

இன்று ராடார் சாதனம் உலகமெங்கும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. விமானப் போக்குவரத்து, சந்திரமண்டலப் பயணம், கப்பல் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து ஆகிய துறைகளில் ராடார் மிகவும் இன்றியமையாத சாதனமாக இன்று விளங்குகிறது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ராடார் என்ருல் என்ன என்பது எல்லோருக்குமே தெரியும். ஆனுல் இதன் சரித்திரத்தை அறிந்தவர்கள் ஒருசில நிபுணர்களே.

1904-ம் ஆண்டில் பகல் நேரத்தில் கோலோன் நகரில் ஒரு பாலத்தின்மீது தொழில் நுணுக்கக் காரியம் ஒன்றில் ஒருவர் ஈடுபட்டிருந்தார். அவர் இரண்டு கறுப்பு பெட்டிகளை வைத்திருந்தார். அதன் மீது இரு உலோகக் கம்பிகள் நீட்டிக்கொண்டிருந்தன. இந்த சாதனத்தை அவர் விளக்குகையில் 'இனி கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளாமலிருக்க இது உதவும்" என்று கூறினுர். இரு உலோகக் கம்பிகள் மூலம் ரேடியோ அலைகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

ரைன் நதியில் ஒரு பெரிய கப்பல் தோன்ற ஆரம்பித்தது. இவர் ஒரு பெட்டியின் கம்பியை அந்தப்பக்கம் திருப்பினுர். கப்பல் 100 மீற்றர் தூரத்திற்குள் வந்தவுடன் அந்த பெட்டிக்குள் "பீப் பீப்" என்ற சப்தம் கேட்க ஆரம்பித்தது. சில விநாடிகள் கழித்து பெட்டிக்குள் மணி அடிக்கஆரம்பித்தது. "ஒரு கப்பல் நம்மை நோக்கி வருகிறதென்பதை இது காட்டுகிறது" என்ருர் அவர். இதை அன்று எல்லோரும் பாராட்டினர். இம்முறையைப் பின்பற்றியே பின்னர் ராடார் சாதனம் அமைக்கப்பட்டது. இந்த பரிசோதனையை அன்று நடத்தியவர் என்ஜினியர் கிறிஸ்டியன் ஹல்ஸ்மேயர். இந்த பரிசோதனை பல வருடங்கள்கழித்து "ராடார்" என்ற பெயரில் உலகப் பிரசித்திப் பெறப்போகிறது என்பதை அப்போது யாரும் எதிர்பார்க்கவில்லை.

1904 ஏப்ரல் 30ம் தேதி இந்த எஞ்சினியருக்கு இந்தக் கண்டுபிடிப்புக்கான உரிமை (பேடண்ட்) அனுமதிக்கப்பட்டது. "டெலிமொபைலஸ்கோப்" என்று அன்று இதற்குப் பெயரிடப்பட்டிருந்தது. வெகு தூரத்திலுள்ள பொருள்களை மின் அலை மூலம் முன்னதாகவே உணர்த்தும் கருவிஎன்று இதற்கு விளக்கம் தரப்பட்டது. பிறகு பல வருடங்கள் வரை இந்தச் சாதனத்தைக் கப்பல் போக்குவரத்து துறை உபயோகிக்க முன்வரவேண்டு என்று இவர் வற்புறுத்தி வந்தார். ஆனுல் இவர் கண்டுபிடிப்புக்கு அக்காலத்தில் யாரும் அங்கீகாரமளிக்க முன்வரவில்லை. சிலர் இதை குறை கூறிவந்தனர். இந்த நூற்ருண்டின் முதல் முப்பது வருடங்களில் இந்த கண்டுபிடிப்பின் மகிமையை உணரும் பக்குவம் ஏற்படவில்லை. இந்த என்சினியரை பின்னர் எல்லோருமே மறந்துவிட்டனர். இவர் டஸ்ஸல்டார்பில் சமீபத்தில் காலமானுர். இவர் கண்டுபிடிப்பை அடிப்படையாகக் கொண்ட ராடார் சாதனம் யுத்தக் காலத்திலும் அமைதி காலத்திலும் பிரமாத முக்கியத்துவத்தைப் பெற்றுவிட்டது. இப்போது ராடாரைக் கண்டுபிடித்தவர் என்று கருதப்படும் ஸர் வாட்ஸன் வாட். இந்த ஜெர்மன் என்சினியர் பெயரையோ அல்லது அவருடைய உரிமையைப்பற்றியோ தெரிந்துகொண்டிருக்கக் கூட மாட்டார், அந்த எஞ்சினியரின் "புகழ் உலகிற்கு தெரியாமலேயே போய்விட்டது

—

## ராஜஸ்தான் கால்வாய் திறப்பு

புதுடில்லி, ஜூன் 26

வருகிற புதன்கிழமை ராஜஸ்தான் கால்வாய் நீர் திறந்து விடப்படும் என அறிவிக்கப்படுகிறது. பாலைவனத்தில் 4 லட்சம் ஏகரா நிலத்திற்கு அது நீர்ப்பாய்ச்சும். கால்வாயின் நீளம் 180 மைல்.

—

## குடிசைகளுக்கு தீவைத்த வழக்கு

புதுடில்லி, ஜூன் 26

விஜயவாடாவில் குடிசைகளுக்குத் தீவைக்கப்பட்டது காரணமாக இதுவரை 84 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாயும், 9 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## மணிவாக்கு

அழிந்து போகக்கூடிய இந்த உடலுக்கு உணவளிக்கின்றோம். அப்படியிருக்கையில் அழியாத ஆத்மாவுக்கு உணவளிக்க வேண்டியது நமது முதற் கடமையாகிறது. அவ்வித உணவு பிரார்த்தனையில் அடங்கியுள்ளது,

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
ஆனி மீ 14 உ. (27-6-64)


## இலங்கை-இந்தியா நட்புறவு

இலங்கை-இந்தியா நட்புறவுச் சங்கம் நேற்று யாழ்ப்பாணத்தில் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. கப்பூரினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது பெரிதும் வரவேற்கத்தக்கது. எப்பொழுதோ ஆரம்பித்திருக்க வேண்டிய இச் சங்கம் காலம் பிந்தியாவது அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிப்பதாகும்.

இந்தியா, இலங்கைக்கு அந்நிய நாடல்ல. இரண்டின் உடல் வேறுயினும் உயிர் ஒன்றே. ஒரு காலத்தில் உடலினுல்கூட பிணைக்கப்பட்டிருந்ததாக சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இப்படிப்பட்ட இரு நாடுகளுக்கிடையிலும் நட்புறவைப் பேணி வளர்ப்பதற்கு ஒரு சங்கம் அவசியமா என்ற கேள்வி எழுவது இயற்கை. என்ருலும் இன்றைய சூழ்நிலையிலும் உலக நாடுகளுக்கெல்லாம் இணைப்புப் பாலமாக விளங்கிய ஜவஹர்லால் நேருவின் மறைவினுலும் இத்தகைய நட்புறவுச் சங்கம் அவசியம் என்றே கருதவேண்டும்.

அரசியல் சூழ்நிலைகள் காரணமாக இந்தியாவை, இலங்கையர் தாய்நாடுஎன்று அழைக்கும் வழக்கம் இன்று அருகி வருகின்றபோதிலும் எதற்கும் இந்தியாவின் முன்மாதிரியைப் பின்பற்றும் வழக்கம் இன்றும் இங்கு இருந்து வருகிறதென்பதையும் இந்தியாவின் வாழ்விலும் தாழ்விலும்தான் இலங்கையின் விதியும் தங்கியிருக்கிறதென்பதையும் நிதான சிந்தையுடையவர் யாரும் மறுப்பதற்கில்லை.

இங்கு பலராலும் வணங்கப்பெறும் புத்த பெருமான் இந்தியாவில் அவதரித்தவர். இந்நாட்டு சைவமக்களுக்கும் இந்தியாவுக்கும் பண்டைக் காலந்தொட்டு இருந்துவரும் உறவு சொல்லிலடங்கா. அரசியலிலும் கூட இரு நாடுகளுக்குமிடையில் தொடர்பிருந்து வந்துள்ளது. இரு நாடுகளும் உள் நாட்டுப் பூசல்களால் சுதந்திரத்தை இழந்து அந்நியருக்கு அடிமைப்பட்டன; என்ருலும் அடிமைத் தளையை ஒடித்து நாட்டின் விடுதலைக்காக இந்தியத் தாயின் மக்கள் உரிமைக்குரல்எழுப்பியபோது. அதன் எதிரொலி இலங்கையிலும் கேட்கத்தான் செய்தது இதன்பயனாக இந்தியத்தாய் விடுதலையடைந்ததும் இலங்கைச் சேயும் தானுகவே விடுதலை பெற்ருள்.

இன்று அரசியல், பொருளாதாரத் துறைகளில் இந்தியாவும் இலங்கையும் அடிப்படைக் கொள்கைகள் பலவற்றில் ஒற்றுமை கொண்டிருப்பினும் அரசியல் அமைப்பில் ஒருமைப்பாடு காண்பது இருநாட்டு மக்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாகும். என்ருலும் 1907-ம் ஆண்டில் கலாநிதி ஆனந்தகுமாரசாமி கூறியது இன்னும் பொருத்தமாகவே தோன்றுகிறது.

"ஆத்மீக, உளஉறவுகளில் எதிர்காலத்தில் இலங்கை ஐரோப்பாவைச் சாருமா? அல்லது இந்தியாவைச் சாருமா? இன்னும் இந்தியா எங்கள் தாய்நாடாக இருக்குமா? அல்லது அனாதைகளாக நாம் வளருவோமா? இதன் பதிலில்தான் எமது எதிர்காலத்தைப்பற்றிய பரிசீலனை தங்கியிருக்கிறது" என்று ஆனந்தகுமாரசாமிகூறினர்.

அவர் அன்று கூறியது இன்றும் பொருத்தமாகவே இருக்கிறது. இந்தியாவின் பாதுகாப்பிலும், வளர்ச்சியிலும் தான் இலங்கையின் பாதுகாப்பும் வளர்ச்சியும் தங்கியுள்ளது. இந்தியாவின் சமய, சமூக, கலாசார மறுமலர்ச்சியில்தான் இலங்கையின் சமய, சமூக, கலாசார மறுமலர்ச்சி பொறுத்துள்ளது. எத்துறையில் அங்கு தாக்கம் ஏற்பட்டாலும் அது இங்கும் பிரதிபலிக்கத்தான் செய்யும்.

அந்நிலையில் இந்தியாவினதும் இலங்கையினதும் நட்புறவை பேணிப் பாதுகாக்க வேண்டியது இருநாட்டு மக்களினதும் கடமை. இதற்கு இலங்கை-இந்தியா நட்புறவுச் சங்கங்கள் பலவழிகளிலும் பயனுள்ள உதவி புரிய முடியும். நட்புறவுச் சங்கம் அமைத்து விட்டால் மட்டும் போதாது. அச்சங்கம் சரியான முறையில் செயல்பட வேண்டும். நேற்று யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இலங்கை-இந்தியா நட்புறவுச் சங்கம் சரியான முறையில் செயல்பட்டு ஆக்கரீதியான உதவிபுரியுமென நம்புகிறேம்.

## கம்பன்விழா மலர்

# 'கற்பினுக்கணி'

(ச. அம்பிகைபாகன் பி. ஏ.)

கம்பன் படைத்த பாத்திரங்களில் மாசு மறுவற்ற உத்தம பாத்திரம் சீதை. பாரத நாட்டுப் பெண் குலத்தின் சிறந்த பண்புகளுக்கெல்லாம் உறைவிடமாக விளங்குபவள் சீதை. இதனாலேயே அசோக வனத்தில் சீதையைக் கண்டு திரும்பிய அனுமான் அவளைப் பற்றிப் பின்வருமாறு இராமனுக்குக் கூறுகின்ருன்.

விற்பெருநதடந்தோள் வீர!
வீங்குநீர் இலங்கைவெற்பில்
நற்பெருந் தவத்தளாய
நங்கையைக் கண்டேனல்லேன்
இற்பிறப்பென்பதொன்றும்
இரும்பொறையென்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பாத்திரத்தை கம்பர் வர்ணித்திருக்கும் முறையைச் சிறிது கவனிப்போம். வால்மீகியின் சீதை இராமரை வில்வளைத்தபின் தான் காண்கிருள். ஆனல் கம்பரோ இராமர் விசுவாமித்திரருடன் மிதிலை வீதிவழியே போகும் போதே காணச் செய்கிருர். இராமரும் சீதையைக் காண்கிருர். சீதையும் இராமரைக் காண்கிருள். "அண்ணலும் நோக்கினன்; அவளும் நோக்கினள்" இப்படி ஒருவரை ஒருவர் கண்ட மாத்திரத்தில் காதல் உண்டாகி "ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினர்."

இப்படிக் காதலுண்டாகி இராமர் வில்லை வளைக்கும் வரைக்கும் சீதையின் மனத்துடிப்புக்களையெல்லாம் கம்பர் விரிவாக வர்ணித்துள்ளார். இராமர் வில்லை வளைத்து அவளுக்கு மாலை சூட்டியிராவிடில் சீதை உயிருடன் வாழ்ந்திருக்க மாட்டாள். இதை இராமர் அனுமானை சீதையைத் தேட விடும் பொழுது கூறியவற்றிலிருந்து நாமறியலாம்.

அனுமான் இராமதூதன் என்பதை நிரூபிக்கும் பொழுது சீதைக்கும் தமக்குமே தெரிந்த சில விஷயங்களை சீதைக்கு கூறும்படி இராமர் கூறுகிருர்.

"வரைசெய் தாள்வில் இறுத்தவன்; அம்மாமுனியோடும்
விரசினன் அல்லனேல், விடு
வல்யான் உயிரென
கரைசெயா வேலையின்பெரிய
காதலன் தெரிந்து
உரைசெயதாள்;
அஃது எலாம் உணர, நீ உரை
செய்வாய்"

தன் இதயத்தில் குடி கொண்ட காதலனை மணக்க முடியாவிட்டால் உயிர் துறக்க நிச்சயித்திருந்ததிலிருந்து நாம் சீதையின் கற்பின் நிலை எத்தகையதென்பதை உணர முடியும்.

### இராமனிருக்கும் இடம் அயோத்தி

கைகேயியின் சூழ்ச்சியினல் இராமருக்குப் பட்டாபிஷேகம் நடைபெருது தடைபட்டு அவர் காட்டுக்குப் போக நேரிடுகிறது. இச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடையாத சீதை, இராமர் தன்னை அயோத்தியில் விட்டுச் செல்ல உத்தேசித்திருந்ததை அறிந்ததும் பெரும் கலக்கமடைகிருள்.

நாயகன் வனம் நண்ணல்
உற்ருன் என்றும்
மேயமண் இழந்தான்;
என்றும்
விம்மலள் "நீ வருந்தலை
நீங்குவென்யான்" என்றதீய
வெஞ்சொல் செவிசுடத்
தேம்புவாள்,

இப்படி வருந்துகிறவளுக்கு இராமர் காட்டுக்குப் போவதால் ஏற்படக் கூடிய கஷ்டங்களை எடுத்துக் கூறுகின்ருர். அப்பொழுது அவள்,

"பரிவு இகந்த மனத்து,
ஒருபற்று இலாது
ஒருவுகின்றனை; ஊழி
அருக்கனும்
எரியுமென்பது யாண்டையது;
நண்டு நின்
பிரிவினும்சுடுமோ பெருங்காடு"
என்ருள்.

சீதையின் வார்த்தைகளைக் கேட்ட இராமர், அவளுக்குப் பதில் இறுக்கமுடியாமல் காட்டுக்கு அழைத்துச்செல்ல உடன்படுகின்றனர்.

சனக மகாராசாவுக்குப் புத்திரியாகப் பிறந்தவள் மரவுரி தரித்து, காட்டுக்குச் சென்று அங்கு வசித்தபோதும் இராமருடன் வாழ்ந்தபடியால், காலத்தை இன்பமாகக் கழித்தனள். இராவணன் தூக்கிக் கொண்டு போகும்வரைக்கும் அவளுக்குக் காடும் அயோத்தியாயிருந்தது.

### சோக வாழ்க்கை

இராவணன் கொண்டு போன காலந்தொடங்கி அவளுடைய வாழ்க்கை ஒரே சோகமயமாயிருந்தது. அப்படியிருந்தும் இராமரைப்பற்றி ஒரு பழிவார்த்தையேனும் கூறியது கிடையாது. அவள் பட்ட துன்பங்களுக்குள்ளும் இராமனை மறந்திலள்; அவனைத் தொழுதவண்ணமே இருந்தனள்.

"விழுதல், விம்முதல் மெய்யுற
வெதும்புதல் வெருவல்
எழுதல், ஏங்குதல், இரங்குதல்
இராமனை எண்ணித்
தொழுதல், சோருதல், துளங்
குதல்,துயர்உழந்துஉயிர்த்தல்
அழுதல், அன்றி மற்று அயல்
ஒன்றும் செய்குவதுஅறியாள்."

அசோகவனத்தில் சீதையைக் கண்ட அனுமான் அவளை இராமனிடம் தானே கொண்டு

(10-ம் பக்கம் பார்க்க)

# தேன் சொட்டும் காவியம்

— யாழ்ப்பாணன் —

தேன் சொட்டச் சுவைசொட்டத் திருவுஞ் சொட்டத்
தித்திக்கும் தீங்கனியும் சேர்ந்து சொட்ட
வான்சொட்டும் அமிழ்தூறும் வரிகள் தம்மால்
வையகத்தில் எம்பெருமான் கம்பர் கோமான்
ஊனிட்டும் உணர்விட்டும் உயிரு மிட்டும்
உன்னஞ்சேர் காவியத்தை உலகுக் கீந்தான்
கானெட்டிச் சென்றனளச் சனகன் கண்தான்
காவியத்தின் பண்பினுக்காங் குதவி நிற்கும்

இராமனுடன் இலக்குவனும் எழிலார் மாதும்
இராவணனும்சூர்ப்பனகைஇந்திரசித்தும்
பார்புகழும் அனுமனுமக் கூட்டந் தானும்
பரதனுடன் சத்துருக்கன் பாங்கு தோற்றச்
சீரார்ந்த செந்தமிழில் சிறக்கப் பாடித்
தேவர்தம் தமுதம்போல் செகத்தோர் துய்க்க
ஆராய்ந்து மழகுறவே அண்ண லீந்தான்
அவன்பெருமை செப்பலுமிங் கெளிது தானே!

தமிழன்னைக் கோரணியாய்த் தந்த காதை
சகமுளநாள் தரணியிலே மறையா தாகும்
கமழுமுயர் காவியத்தில் கருத்தே யூன்றிக்
கடவுள்கதை எனத்தொழுவார் சகத்தி லுண்டு
அமிழ்துண்டு சுவையுண்டு அனந்த முண்டு
அருந்தமிழின் துள்ளுநடை எங்கு முண்டு
மகிழ்வுறவின் னூலளித்த கம்ப வள்ளல்
மானிலத்தி லவன் பெயர்தான் நாளும் வாழி!

# ஐயாறன்

## எழுதுவது

ஒரு மாத காலம் வேலை எதுவுமில்லாமல் மனம்போன இடமெல்லாம் தமிழகத்தில் சுற்றினேன். சுற்றிவிட்டு இங்கு வந்ததும் எவ்வளவு விதவிதமான வேலைகள் காத்துள்ளன! எவ்வளவு வேற்றுமை! வேலை செய்தால்தான் மனதுக்குடண்மையில் மகிழ்ச்சி. வேலை இல்லாவிட்டால் ஏதோ குற்றம் செய்வதுபோல் உணர்கின்ருேமல்லவா?

கொழும்புக்கு வந்த நான்றே, சட்டக் கல்லூரி தமிழ் மாணவர் சங்கத்தின் விழா, சரஸ்வதி மண்டபத்தில் நடப்பதாயும், ருசிகரமான பல நிகழ்ச்சிகளுக்கு ஒழுங்கு செய்துள்ளதாகவும் அழைப்புக் கிடைத்தது. சற்றே தாமதமாகத்தான் சென்றேன். மண்டபம் தாங்காமல் எதிர்பார்த்ததைவிட அதிகமான கூட்டம். அச்சமயம் பட்டி மண்டபத்திலே ஒரு வாக்குவாதம் காரசாரமாக நடந்தது. தமிழிலே நீதி பரிபாலனம் நடத்த முடியுமா என்பது பற்றிய விஷயம். அடுக்குமொழியிலே, காரசாரமாக இரு தரப்பினரும் வாய்ப்போர் செய்தது நல்லதோர் விருந்தாகும். இங்கு தமிழிலே நீதிபரிபாலனம் நடைபெறும் காலம் வரப்போகிறதென்ற நம்பிக்கையை எனக்கு அந்த விவாதம் அளிப்பதாக இருந்தது.

பின்னர் ஓர் அழகான நடனம். சிங்களப் பெண்ணொ பத்மினி தகநாயக்கா பரதநாட்டியம் கற்று நடனமாடியது பலர் மனதையும் கவர்ந்தது. தமிழரின் நடனக்கலை மட்டுமல்ல இசை, இலக்கியம் இவற்றின் மேன்மையை சிங்களவர்களும் உணர்ந்து, அக்கலைச் செல்வங்களை அவர்களும் பகிர்ந்து கொள்ளும் காலம் நெருங்கி வருவதற்கு அந்த நடனம் ஓர் அறிகுறியாக இருந்தது. அரசியல் வாதிகளால் தீர்க்க முடியாத பிரச்னைகளை கலைஞர்கள் அழகாகத் தீர்த்துவிடக் கூடுமல்லவா?

சட்டக்கல்லூரி தமிழ்ச்சங்கத்தவர்கள், ஒரு சிங்களப்பெண்ணைக்கொண்டு நடனமாடச் செய்ததும், அப் பெண்ணும் இதற்குச் சம்மதித்து, அழகாக மூன்று நடனங்கள் ஆடியதும், இளைஞர்களிடையே வகுப்புவாத மனப்பான்மை இல்லை என்பதையும், எதிர்காலம் மிக மேலாக இருக்கப் போகின்றதென்பதையும் காட்டுவதாக இருந்தது. சபாஷ் சட்டக் கல்லூரி தமிழ்மாணவர்கள்.

* * *

சிதம்பரத்திலே கண்ட "இனித்தமுடைய பொற்பாதம்" கொழும்பிலே கொட்டாஞ்சேனை பிள்ளையார்கோவிலில் புதிதாகத் தோன்றுவதாகவும், யாழ்ப்பாணத்திலிருந்து சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேச்வரர் அங்கு கோயில் கொள்ள வந்திருப்பதாயும் அன்றே மற்ருேர் அழைப்பு.

கோவில் சின்னதுதான். கூட்டமும் குறைவு. ஆனல் பக்திசிரத்தையிலும், மந்திரங்களிலும் மிக உயர்ந்திருப்பதை உணர்ந்தேன். சனிபுரம் குருக்களவர்கள்மேலான முறையில் இந்த மூன்றுநாள் விழாவினை நடத்தினர்கள். ராமகிருஷ்ண ஆச்சாரியார் இத்திருவுருவங்களை மனதைக் கவரும் முறையிலே செய்துள்ளதைக் காண எனக்கு 'டபிள்' மகிழ்ச்சி நமது புராதனமான இத்தமிழ்க்கலை இன்னும் யாழ்ப்பாணத்தில் உயிருடன் வளர்ந்து வருகின்றது. போதிய ஆதரவளித்தால் இக் கலைகளெல்லாம் எவ்வளவோ வளரும்.

முன்போல் சிதம்பரத்துக்கு நாம் செல்ல முடியாவிட்டாலும் சிதம்பரேசன் தானே இங்கு பல ஊர்களிலும், பல கோவில்களிலும் வந்திருந்து

10-ம் பக்கம் பார்க்க

# கம்பன் விழா மலர்

## கம்பனுடன் பிறந்த பண்பு

— கந்தமுருகேசன் —

கம்பன் கழகத்தின் தலைமைக் குழு உறுப்பினராய் விளங்கும் திரு: கந்த முருகேசனுர் அவர்கள் ஒரு முது தமிழ் அறிஞர். இருக்கை முடவராய் இருந்தும், இரத்தக் கொதிப்பு நோயால் உழன்றும் அல்லலுறும் அவர், எமது வேண்டுகோளினை ஏற்று இக்கவிதையைச் சொன்னமைக்காக, எமது நன்றி அவர்க்கு உரியதாகுக.

கம்பனை நான் கண்டதிலைக் கண்டு கொண்டேன்
கவியமுதை யூட்டினனுற் கவிக டம்மை
யம்புவியிற் சேனையெனத் திரட்டித் தந்தா
னவைகளுக்குங் கலையறிவு புகட்டித் தந்தா
னும்பரென நின்றிலங்குங் கவியின் வேந்தை
யொப்பற்ற வழக்கறிஞ ளுக்கித் தந்தா
னம்புதலிற் காகாத கதைக டம்மை
நல்லசுவைப் பாகினிலே புதைத்துத் தந்தான்.

எவ்விடத்தே யெவர்க்காகப் பேசினலு
மிளப்பமுற விடாதவர்தங் கொள்கை தன்னை
தெவ்விடத்தோர் தாமுங்கேட் டிறும்பூ தெய்தச்
சிறப்பினெடு மவரவராய் நின்று பேசுங்
கவ்வையறு பேரறிஞ னடுநின்ருயு
நல்லறிஞன் காட்டாகக் குடக்கா தன்ருன
றவ்வலுறு தம்பியுடன் பேசுங் காலைத்
தானிரண்டு பேரெனவே நின்று சொல்வான்

பாட்டுடைய தலைமகனு மிராமன் றன்பாற்
பன்னுபிழை பலவிருக்கக் காட்டித் தந்தான்
வேட்டனவே பெரியவெனக் கூறும் பான்மை
வியன்கம்பன் பாலில்லை யென்ன லாகும்
பாட்டினிலே சுவைத்தவர்சாப் பாட்டின் பாலும்
பண்ணுமுளங் கொள்ளாரின் னமுத மேனும்
வேட்டலில ராய்விடுவ ரென்ருற் பின்னை
விளம்புவதென் நானுமந்த நிலைய னேன்

உற்றுணர்ந்து மறைபொருளைக் கொள்ளவைக்கு
முயர்பண்பு கம்பனுடன் பிறந்த தர்கு
மற்றமறு 'திறையோடு மரசி றைஞ்சு'
மருங்கவியே சான்றுபிற பல்சான் றுண்டால்
வெற்றிமிகக் கம்பன்விழா விளங்கல் வேண்டு
மேதினியெ லாங்கவிதை துலங்கல் வேண்டு
முற்றபெரு மறிஞரெலா மொன்று கூடி
யுயர்கம்பன் பூங்காத்தே னுகர்தல் வேண்டும்

இருக்கைமுட மாகிவிட்டே னெழுத வென்ரு
லென்கையு மிடுப்புழுத லுறுப்பி யாவும்
பெருக்குபல வேலைநிறுத்தங்கள் கண்டே
பேணியவை தாமுங்கைக் கொண்டு விட்ட
வுருக்குகின்ற நற்குருதிக் கொதியி னுலே
யுளமடிந்தே யறிவொடிந்து நினைவு மாண்டு
சுருக்கமறக் கற்றவையு மறந்து விட்டேன்
சொல்லுதலெ னிவ்வளவில் விடுகின் றேனே.

## விபீடணனுக்கு இராமன் அருளுங் காட்சி

(பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை)

கைகேயி தன்மகன் பரதன் நாடாள இராமன் வனம்புக வேண்டுமென்று தசரதனிடம் கேட்கின்ருள். இராமன்பிரிவை எள்ளளவும்பொறுக்கமுடியாத தசரதன், "என் மகன் என் கண் என் உயிர் எல்லா உயிர்கட்கும் நன்மகன்" என மைந்தன்மீது கொண்ட திண்ணிய அன்பை முன்னுள்ள சொல்லிலும் அதனை அடுத்துவரும் சொல் பொருள் உணர்ச்சி மிகுந்து வரும் பான்மையில் வார்த்தைகளை அடுக்கிக் காட்டுமாற்றால் எடுத்திடித்துக் காட்டுகிருன். இராமனை "எல்லா உயிர்கட்கும் நன்மகன்" எனக் கூறும்போது "நீ ஒருத்தி மட்டும் அந்தத் தெய்வக் குழந்தையை வெறுப்பதேனே அடி பாவி!" எனத் தசரதன் கைகேயியை கேட்கும் வினவொன்றும்குறிப்பாக அவன் வார்த்தையில் ஒலிக்கின்றது நம்காதில் விழுகின்றதல்லவா?

இங்ஙனம் நல்லவர் தம் இன்னுயிராக இலங்கும்இராமனைச் சரணடைய விபீடணன் பெரிதும் விழைகின்ருன். அறநெறி பிறழ்ந்த அண்ணனை விட்டு அறக்கடலாம் அண்ணலைச் சார்ந்து 'மேலரசு' (மோட்சபூமியிலே வீற்றிருக்கும் பேறு) எய்த அவன் உளமும் உயிரும் துடிக்கின்றன. கொடும்பாடிழைக்கும் அரக்கர் வருக்கத்தவனுகிய தன்னை அவன் ஏற்றுக் கொள்ளுவது இயலக்கூடியதொன்ரு என்ற வினு அவன் நெஞ்சைச் சுடுகின்றது. இராமன் மனத்திலுள்ள- அபயமென வந்தோரைக் கைவிடுதல் அரசருக்கு அறனன்று என்ற- கருத்தைச் சொல்லின் செல்வனுகிய அனுமன் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்வண்ணம் உதாரணங்களுடன் காட்டுகிருன். இராமன் ஏவச் சுக்கிரீவன் விபீடணனை அழைத்து வருகின்ருன். நஞ்சனைய வஞ்ச நெஞ்ச இராவணன் வஞ்சியனைய சீதைச் செல்வத்தை வௌவிச் சென்றதனுல் விஞ்சுதுயரொடு வைகந்திருக்கும் இராமன் திருவுருவை நெஞ்சகத்திருத்தியபடியே விபீடணன் வருகின்ருன்.

வெண்ணிறம் வாய்ந்தவானர சேனைகளுக்கு நடுவே மகாமேருமலைபோல அண்ணனுக்கு உறுதுணையாக இலக்குவன் வில்லேந்தி நிற்க, இராமன் வீற்றிருக்குங் காட்சியை விபீடணன் சற்றுத் தூரத்தில் காண்கின்ருன். இவன் இராமனைக் கண்டதனை "கார்க்கடல் கமலம் பூத்த தெனப்பொலிவானைக் கண்டான்" (கருநிறம் பொருந்திய சமுத்திரம் கண், வாய், கரம் ஆதிய உறுப்புக்கள் தாமரை போலத் தோற்றந்தர மகனுருக் கொண்டாற் போலத் தோற்றும் இராமனைக் கண்டான்) எனக் கம்பன் காட்டுகிருன். காரிகையைப் பிரிந்த சோகத்திடையேயும் கருணை கருக்கொண்டிலங்கும் கார் வண்ணனைக் கண்ட விபீடணன், "ஆரருள் சுரக்கு நீதி அறநிறங் கரிதோ" எனக்குழறி விடுகின்ருன்.

வெள்ளலை கொழிக்குங் கடலருகே போர் செய்யவந்த மர்ந்தநிலையிலும் கருணை அலை எறியும் இராமனைக் கண்ட விபீடணனுக்கு நல்லோர்படும் இடுக்கண் பொடியாக அல்லோரை அறநெறி முறையிலே தடியுமாறு விண்ணவர்வேண்டுகோளுக்கிணங்கி வந்திருக்கும் திருமாலின் தோற்றம் பளிச்சிடுகின்றது. சீதையொடுகூடி வீற்றிருக்க வேண்டியவன் ஏகனுகவே அல்லலோடிருக்கும் சூழ்நிலை இராமனைப் போலவே விபீடணனுக்கும் சீதையின் உறுப்புகளை- முகத்தாமரையை நினைவூட்டுகிறது. அணுகின்று இராமனை விபீடணன் உளமுருகத் தரிசிக்கின்ருன், கரையை இடிக்கும் திரைகள் வெண்மணற் பரப்பில் ஆக்கும் வளைவு சீதையின் வளைவுச் சிறப்பொடுகூடிய புருவத்தை நினைவூட்டுதலைக் கம்பன், "கோணுதற் கமைந்த கோலப் புருவம்போற் திரையுங்கூட" என்று காட்டுகிருன். மகளிர் விரும்பிப்பூணும் குளிர்ந்த முத்துப்போல துல்லிய வெண்மணல் காட்சிதர அதன்கண் தன் திருமேனி நீலச்சாயம் வீச இராமவன் வீற்றிருக்கின்ருன். பார்க்கப் பார்க்கப்பளிச்சிடும் வெண்மணற் பரப்பு மகளிர் முகத்திற்கு ஒளியையும் உயிருட்டத்லதயும் கொடுக்கும்கண்ணின் பரந்த வெண்பாகம் போலத் தோற்றமளிக்கிறது. வெள்ளைமணல்மிசை கண்கவர் காரொளிவீச அமர்ந்திருக்கும் இராமன்நீலச்சாயல் சீதையின் வெண்விழிப்பரப்பின் நடுவே தோற்றும் கருவிழி போலத் தோற்றந்தருகின்றது. அந்த நீலச்சாயலுக்குரிய நாயகனை இராமனே சீதையின் கருவிழி நடுவே மிளிர்ந்து அவளுக்கு ஒளிவழி காட்டும் கண்மணிப் பாவையாகக் காட்சி அளிக்கின்ருன். தசரதன் 'என் கண்' எனக் கைகேயிக்குக் காட்டிய இராமன் விபீடணனுக்குச் சீதாதேவிக்கும் கண்மணியாகவே வயங்குந் தோற்றத்தை விபீடணன் வாயிலாகக் கம்பன் நாமெல்லாங் காணுமாறு கருத்திற்குத் திருத்தம்பிக்க ஓவியமாக்கித்தரும் அருமைப் பாட்டை என்னென்பேம்!

'கோணுதற்கமைந்த கோலப்
புருவம் போற் திரையுங் கூடப்
பூணுதற் கினிய முத்தின்
பொலிமணல் பரந்த வைப்பிற்
காணுதற் கினிய நீள வெண்
மையிற் கருமை காட்டி
வாணுதற் கமைந்தகண்ணின்
மணியென வயங்குவானை'

(இரா. விபீடணன் அடைக்கலப்படலம் பா. 134)

கோணுதற்கு அமைந்த கோலப்புருவம்— இயற்கையிலேயே வளைந்த அழகிய(சீதையின்) புருவம்,

திரையும் கூட-அலையும் வளைந்துவளைந்து தோற்ற.

வைப்பு-இடம்.

வாணுதற்குஅமைதந்கண்- ஒழிபொருந்திய நெற்றிக்குச் சிறப்பளிக்கும் கண்.

வயங்குதல்-விளங்குதல்.

## இலங்கை கம்பன் கழக வரலாறு

(பொதுச் செயலாளர்கள்)

தமிழ் நாட்டிற்குப் பல பெருமைகள் உண்டு. அவற்றுள் தலையாயது, அது கம்பன் என்ற பெரும் புலவனைப் பெற்றமையேயாகும். 'கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று வரகவி பாரதியார் பெருமை கொள்வது முற்றிலும் பொருந்துவதே. அவன் கவிச்சக்கரவர்த்தி. இராமாயணமாகிய அமுதசுரபியைத் தந்தமையால், கம்பன் பெருமை பெற்ருன். அவனேடு தமிழும் தமிழகமும் பெருமையுற்றன. 'தமிழுக்குக் கதியாவார் இருவர்; ஒருவர் கம்பர்; மற்றவர் திருவள்ளுவர்' என்றமேலோர் கூற்றை மாற்றவல்ல புலவர் பெருமக்கள், இன்றுவரை தோன்றவில்லை. 'கம்பனுக்கு இணை கம்பனே. வள்ளுவர்க்கு இணை வள்ளுவரே' என்ற நிலைதான் இன்றும் உள்ளது.

இருப்பினும், கம்பனது பெருமை கற்றறிந்தார் மாட்டல்லாது, மற்ருேரிடையே அத்துணைப் பரவவில்லை என்றே கூறல் வேண்டும். குடத்துள் விளக்காகவே கம்பன் இருந்து வருவது தமிழுக்கும், தமிழர்க்கும் பேரிழப்பாகும். வள்ளுவனையும், பாரதியையும் உணர்ந்து சுவைத்து வரும் ஈழத்தமிழ் மக்கள் கம்பனையும் அறிந்து போற்றுதல் வேண்டும்.

இந்நோக்கத்தினை அடிநிலையாகக் கொண்டுதான், இலங்கைக் கம்பன் கழகம் தோற்றுவிக்கப் பெற்றுள்ளது.

கம்பனுக்கு ஆண்டுதோறும் விழா எடுத்தல்,

பொதுமக்களிடையேயும், மாணவரிடையேயும் கம்பனை அறிமுகம் செய்தல்,

கம்பராமாயணத்திற்கு நல்லதொரு விளக்கவுரை செய்தல்.

பாடபேதங்களை ஆராய்ந்து கம்பராமாயணப் பதிப்பொன்றுவெளியிடுதல்,

இவற்றேடு மற்றைப் புலவர்களையும் அவர்களுடைய படைப்புக்களையும் பரப்புதல்,

என்ற இன்னேரன்ன குறிக்கோள்களை முன்வைத்து 21-4-64ல் இலங்கைக் கம்பன் கழகம் உருக்கொள்வதாயிற்று.

கழக அமைப்பினை மூன்று பிரிவாக வகுத்துள்ளோம். அவை முறையே தலைமைக் குழு, செயற்குழு, ஆய்வுக்குழு என்பன. இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து தமிழார்வமும், கலையார்வமும் மிக்கோராய் விளங்கும் பெரியோர் பலரும் தலைமைக் குழுவில் இடம்பெறுவர். கழக வளர்ச்சிக்குத் தக்க ஆலோசனைகளை வழங்குதலும், 'உற்றுழி உதவலும், உறுபொருள் கொடுத்தலும்' இவர் தம் கடமையாகும்.

ஆய்வுக்குழு, பல்கலைக்கழகப் பேராசிரியர்களையும், கல்லூரி ஆசிரியர்களையும், பல தமிழறிஞர்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. இதன் செயற்றிட்டங்கள் பலவாகும். கம்பராமாயணம் பற்றியும், கம்பனைப் பற்றியும் இதுவரை வெளிவந்துள்ள நூல்களின் அட்டவணையை அமைத்துத்தருதலே இவற்றுள் முதற்றிட்டமாய் ஏற்கப்பெற்று, செயலுருவாவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எமது கழகம் தோன்றி இரண்டு திங்கள்களே ஆகின்றன, உலகைத் தெளிவாகப் பார்க்குந் திறன்கூடக் கைவராத பசலைப் பருவம் இது, இச்சிறிய காலப்பிரிவினுள். பெருந்தொண்டு செய்ய இயலாவிட்டாலும், எம்மால் இயன்றவற்றைச் செய்ய முயன்றுள்ளோம்.

மாணவரிடையே கம்பராமாயணச் சித்திரப் போட்டி ஒன்றினை ஒழுங்குசெய்து, முதன்மை பெற்ருேர்க்கு கம்பன் விழாவில் பரிசுகள் வழங்கவிருக்கின்ருேம்.

'கம்பன்' என்ற முத்திங்கவிதழின் முதவிதழ் இன்று வெளியாகின்றது.

யாழ்ப்பாணத்துக் கல்லூரிகள் நான்கில் எமது கழக உறுப்பினர் சென்று, உயர் வகுப்பு மாணவர்க்குக் கம்பன் கவித்திறத்தை எடுத்தியம்பியுள்ளனர்,

பல்துறை அறிஞரும் ஒருங்கு கூடிக் கம்பன் திறத்தினை எடுத்துரைக்கின்ற கம்பன் விழா இன்று நடைபெறுகின்றது.

இவை நல்ல தொடக்கங்கள் என்று கருதி, எதிர் காலத்திலே தமிழன்பர்கள் ஆதரவு தருவார்களானுல் கழகம்சிறக்க வழியுண்டு; கழகத்தின் எதிர் காலம், தமிழிலக்கியத்தின் எதிர்காலம் என உணர்ந்தால் யாவும்நன்றே முடியும். 'நன்றை இன்றே செய்க'

வர்ணனை

# கம்பன் கவிச்சித்திரம்

—தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான்—

மாலைப்பொழுதில் மெல்லிய தென்றல் மிதிலை மாநகரில் வீசுகிறது. மாடங்களில் அமைந்த மணிப்பூங்கொடிகள் அசைந்து ஆடுகின்றன. அரச வீதியின் இரு மருங்கும் வரிசையுள் விளங்கிய வீடுகளினின்றும் எழுந்தவீணை ஒலிவானின் வழியே தவழ்ந்து வருகின்றது. முத்துப்போல் பூத்து மரகதம் போல்காய்த்துப் பவழம்போல் பழுத்து இலங்கும் கமுகுமரத்தில் கட்டிய ஊஞ்சலில் பருவ மங்கையர் இருந்து பாடி ஆடுகின்றனர். பூஞ்சோலைகளில் பளிங்குபோன்ற பந்துகளை வீசிப் பிடித்துப் பாவையர் விளையாடுகின்றனர். அரங்குகளில் நடன மாதர் கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல களிநடம் புரிகின்றனர். இத்தகைய இன்பம் நிறைந்த அந்த அணி வீதியில் கோமுனிவர் முன்னே செல்ல தம்பி பின்வர மஞ்செனத் திரண்ட கோலமேனியும், கஞ்ச மொத்தலர்ந்த கண்ணும் வாய்ந்த இராமன் செல்கின்றான்.

அப்பெரு வீதியிலே அமைந்த கன்னிமாடத்தின் மேடையிலே மிதிலை மன்னன் மகளாய சீதை மெல்லிய பூங்காற்றின் இனிமையை நுகர்ந்து இன்புறுகிறாள். அருகே அமைந்த அழகிய துறையில் அன்னம்பெடையொடு ஆடல் கண்டு களிக்கின்றாள். அந்நிலையில் கன்னிமாடத்தின் மருங்கே செல்லும் கமலக்கண்ணன், மேடையிலே இலங்கும் மின்னொளியைநோக்குகின்றான். பருவமங்கையும் எதிர்நோக்குகிறாள்... இருவர் கண்நோக்கும் இசைகின்றது. பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணிப்புற்ற இராமன் காதலை மனதிற் கரந்து வீதியின் வழியே சென்று மறைகின்றான். இது கம்பனது வருணனை. இந்த வருணனையில் இயற்கை எழிலுற வருணிக்கப்படுகிறது. அதற்குமேல் காதலர் உள்ளம் ஒன்றோடொன்று கலந்து உறவாடும் நிலையும் அழகாக வருணிக்கப்படுகிறது. கம்பனது காவியத்தில் பல பல அம்சங்கள் நம் உள்ளம் கவர்கின்றன. கதை அமைப்பு, காவியக் கட்டுக் கோப்பு, பாத்திர சிருஷ்டி, நாடக பாவம், உவமை அழகு முதலியவை நிரம்பிய காவியம் அது. எப்படி, எந்தெந்தக் கோணத்திலிருந்து ஆராய்ந்தாலும் கம்ப ராமாயணத்தின் சிறந்த அம்சம் கவிதை. அந்தக் கவிதை மூலம்தான் எவ்வளவு அழகு அழகான வர்ணனைகள்! எத்தனை எத்தனை அற்புத சித்திரங்கள்!

கம்பன் இயற்கையைத்தான் சிறப்பாக வர்ணிக்கிறான் என்றில்லை. ஒரு ஆடவனையோ இல்லை ஒரு பெண்ணையோ வர்ணித்தாலும் சரி, ஒரு காதல் காட்சியை, ஒரு சோகபாவத்தை, ஒரு போர்க்களக் காட்சியை, ஒரு அவலநிலையை எதை வர்ணித்தாலும்சரி அதில் அவனது தனித்தன்மை விளங்கும்படி செய்யும் பேராற்றல் பெற்றவனாக இருக்கிறான். அதனால் தானே 'கல்வியில் பெரியவன் கம்பன்!', 'கவிச் சக்கரவத்தி கம்பன்' என்றெல்லாம் பாராட்டப்பட்டு வந்திருக்கிறான். கம்பனது வர்ணனைகள், வெறும் இயற்கை வர்ணனைகளாக மட்டும் அமையாமல் மனித உள்ளத்தில் உருவாகும் உணர்ச்சிகளையும் கலந்து விளங்கும் ஒரு அற்புதப்படைப்பாக எப்படி இருக்கின்றன என்பதற்கு மட்டும் ஒன்றிரண்டு சான்று காணலாம்.

காவியங்களில் சூரிய உதயம், சூரியாஸ்தமனம், சந்திரோதயம் முதலிய சிறப்பான வர்ணனைகளாக அமைவதுண்டு. தங்கம் இப்போது திருமாவின் ஆயி உருக்கித்தழல் குறைந்துத் தேனுக்கி எங்கும் பரப்பியதோர் இங்கிதமாக இலங்கும் பாரதியின் சூரியோதயம் நம் நெஞ்சைவிட்டு அகலாத சித்திரமன்றோ. அதைப்போலவே கம்பனும் வானரங்கில் நடம்புரியும் கண்ணுதல் வானவன் சடை விரிந்தால் என விரிந்த கதிர்கள் என்று காலைச் சூரியன் கதிர் வீசி வெளிவருவதை வர்ணிக்கிறான். அதுபோலவே அவனது காவியத்தில் அந்திகரு சித்திரமும்' அழகோவியமாகவே அமைந்து விடுகின்றது...என்றாலும் அவனுடைய சந்திரோதயவர்ணனை ஒன்று மிகச் சிறப்பாக இருக்கிறது.

ராமன், லக்ஷ்மணன், சீதை மூவரும் அயோத்தியை விட்டுக் காடு நோக்கிச் செல்கிறார்கள். மூவரும் காட்டிற்குள் நுழைந்து போகிறபோது, வழி மறிப்பதுபோல இருள் தொடர்கிறது. அவர்களோடு தோழமை பூண்ட இருள் அப்படித் தடுக்கும்போது, தேவர்கள் சும்மா இருப்பார்களா? அந்த இருளைத் துரத்த ஒரு கைவிளக்கு எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறார்கள். அப்படி வானவர்கள் ஏந்தி வந்த விளக்கு போலவே சந்திரன் உதயமாகிறான் என்று பாடுகிறான்.

பொய்வினைக்கு உதவும்
வாழ்க்கை
அரக்கரைப் பொருந்தி
அன்னார்
செய்வினைக்கு உதவும் நட்டால்
செல்பவர் தடுப்ப தேய்க்கும்
மைவிளக்கியதே அன்ன
வயங்கு இருள் துரத்த
வானம்
கைவிளக்கு எடுத்த தென்ன
வந்தது கடவுள் திங்கள்

என்பது கம்பன் வருணனை. இது வெறும் வர்ணனையாக மட்டும் இருக்கவில்லை. ராமாவதார ரகஸ்யத்தையே வெளிப்படுத்தும் வகையில் அல்லவா வர்ணனை வடிவெடுக்கிறது' புரந்தரன் செய்த பெருந்தவந்தானே பரந்தாமனை ராமனாக அவதாரம் செய்யும்படி செய்திருக்கிறது. அந்த உண்மையையே மனித உள்ளத்தோடு விளக்கும் வகையில் வர்ணிக்கிறான் கம்பன்.

இன்னும் பெண்ணின் பெருமையை எப்படி எப்படி எல்லாமோ வர்ணனை செய்திருக்கிறார்கள் கவிஞர்கள். மலையிடைப் பிறவாமணி, அலையிடைப் பிறவா அமுது என்றெல்லாம் சிலப்பதிகார காப்பிய நாயகியை இளங்கோ அடிகள் வர்ணிக்கிறார். ஆனால் கவிச் சக்கரவர்த்தி, சிறையிருந்த செல்வியாம் சீதையை வர்ணிக்கும் வர்ணனை விண்நோக்கி உயர்கிறது. அசோகவனத்தில் சிறையிருந்த சீதையைச் சென்று காண்கிறான் அநுமன். அவள் காலடியில் மூவுலகு ஆளும் இராவணன் வீழ்ந்து, அவள் காதலுக்கு இரங்கி நிற்பதையும் பார்க்கிறான். அவனை துரும்பென மதித்து சீதை பேசும் பேச்சையும் கேட்கிறான். இத்தனையையும் பார்த்துவிட்டு கிஷ்கிந்தைக்குத் திரும்பி ராமனிடம் அச்சிறை இருந்தாளின் ஏற்றதைக் கூறுகிறான் எத்தனை எத்தனைவிதமாகவோ! சோகத்தில் மூழ்கியிருக்கும் நங்கையாம் சீதையின் கற்பொழுக்கத்தால் தேவ மகளிர் எல்லாம் உயரிய நிலை' அடைந்துவிடுகிறார்கள். இதுவரை சிவபிரானின் திருமேனியில் இடது பக்கத்தில் மாத்திரம் இடம் பிடித்திருந்த பார்வதி சிவபெருமானது தலைமேலே ஏறி உட்கார்ந்து கொள்கிறாள்- தாமரை மலரில் இருந்த லக்ஷ்மிதேவியும் திருமாலின் மார்பில் இருந்தவள், ரக்கணக்கான முடிகளுக்கும் மேலாகி ஒரே வியாபகமாக வீற்றிருக்கிறாள். அவ்வளவு உயர்வு வந்துவிட்டது பெண்மைக்கு என்று முழங்குகிறான் கம்பன்.

சோகத்தாள் ஆய நங்கை
கற்பினால் தொழுதற்
கொத்த
மாகத்தார் தேவிமாரும்
வான் சிறப்பு உற்றார்,
மற்றைப்
பாகத்தாள் இப்போது ஈசன்
மகுடத்தாள்; பதுமத்
தாளும்
ஆகத்தாள் அல்லள், மாயன்
ஆயிரம் மௌலி மேலாள்

என்பது கம்பனது வருணனை. ஆம்...பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்னும்படியாக அல்லவா வர்ணனை விரிகிறது!

காதல் வருணனை, இயற்கை வருணனை, பெண்ணின் உயர்வு வருணனை என்றெல்லாம் கம்பனது வருணனைகளைப் பார்த்தோம்...ஒரு போர்க்கள வருணனையையும் பார்க்கலாம். இராமராவண யுத்தத்தில் வெற்றி சூடியர் ராமலக்குமணர். இவர்களை வர்ணிப்பதும் அவ்வர்ணனை சிறப்பாக இருப்பதும்பெரிதல்ல. போரில் தோற்று மாண்டுவிட்ட வீரனும் ராவணனது உடலில் உள்ள பொலிவையும் உள்ளத்திலுள்ள வீரத்தையும் அவை எல்லாம் அழிந்து போகும் அவலத்தையும் வர்ணிக்கிறானே கம்பன், அதையல்லவா நாம் பார்க்க வேண்டும். இலங்கையில் நடந்த முதல்நாள் போரில் தோற்று, தேர் இழந்து, வில்இழந்து, வழி இழந்து, மணிமகுடம்சிந்த நிற்கிறானே ராவணன், அவனைக் கண்டுதான் கம்பன் எவ்வளவு மனம் மாழ்கி நிற்கிறான்.

அறம் கடந்தவர் செயல் இது வென உலகம் ஆர்க்கும் வகையில் நிறம்கரிந்து நிலம் விரல் கிளர்ந்திட நிற்கிறான் ராவணன், என்று ஒரு பெரிய சோகத்தையே காட்டுகிறான். அதே இராவணன் கடைசியில் இராமன் அம்புக்கு இரையாகி மாண்டு மண்மேல் கிடந்தபோதும்

"வெம்மடங்கல் வெகுண்டு
அனைய சினம் அடங்க
மனம் அடங்க வினையும்
வீயத்
தெம்மடங்க, பொருதடக்கை
செயல் அடங்க
மயல் அடங்க ஆற்றல்தேய
தம்மடங்கு முனிவரையும்
தலை அடங்க
நிலையடங்கச் சாய்த்த
நாவின்
மும்மடங்கு பொலிந்தன
அம்முறை துறந்தான்
உயிர் துறந்த முகங்கள்
அம்மா!"

என்றல்லவா வர்ணிக்கிறான். அந்த வருணனைதான் எவ்வளவு கம்பீரமான முறையில் இருக்கிறது. போர்க்களத்தில் தோற்று, உயிரிழந்துவிட்டவனேயானாலும் அந்த ராவணனது காம்பீரியத்தைத் தன் கவி வன்மையினால் எவ்வளவோ உயர்த்தி விடுகிறானே கம்பன். இன்னும் இது போன்ற எத்தனை எத்தனையோ வருணனைகள்.

## ஆசிரியர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்க வடபிரதேச கிளைகளின் விசேட பொதுக் கூட்டம் அடுத்த மாதம் 5-ம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறும். இக் கூட்டத்தில் கல்வி மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஜே. பெரேரா பிரதம பேச்சாளராக கலந்துகொள்வார். வடபிரதேச உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம், திரு. வி. என். நவரத்தினம், திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோரும் கூட்டத்தில் பேசுவார்கள்.

## கூட்டரசாங்கத்துக்கு ஆதரவு

### சமசமாஜ வாலிபமுன்னணி தீர்மானம்

யாழ்ப்பாணம், சனி

வண்ணார்பண்ணை சமசமாஜ வாலிபமுன்னணி கூட்டரசாங்கத் திட்டங்களை அமுல் நடத்தத் தேவையான ஆதரவு கொடுப்பதாகத் தீர்மானித்துள்ளது.

'இன்றைய அரசியல் சூழ்நிலையில் சமசமாஜக்கட்சியின் தீர்மானம் ஒரு தீர்க்கதரிசனமானதென்றும் அதைத் தாம் ஆதரித்து கூட்டரசாங்கத்தின் முற்போக்குக் கொள்கைகளை அமுல் நடத்த உதவுவதெனத் திடசங்கற்பத்துடன் கடமையாற்றுவதெனவும் வடபகுதியிலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் உள்ள பதுக்கல் பேர்வழிகளிலும் லஞ்ச நாதர்களிலும் நடவடிக்கை எடுக்கும் வகையிலும் ஆதரவு கொடுப்பதென வண்ணார்பண்ணை சமசமாஜ வாலிபர் முன்னணி அண்மையில் கூடியபொழுது தீர்மானித்துள்ளது.

## பெற்றோர்சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பெற்றோர் சங்கத்தின் ஆதரவில் திங்கட்கிழமை மாலை வண்ணை. வைத்தீஸ்வரவித்தியாலய மண்டபத்தில் தேசியகல்விவெள்ளையறிக்கை என்னும் பொருள் பற்றி திரு. எஸ். ஏச். பேரின்பநாயகமும் திரு. கே. நேசையாவும் உரைநிகழ்த்துவார்கள்.

## நெற்பயிர் வளர்ச்சியை தூண்ட மருந்து

டோக்கியோ, ஜூன் 26

நெற்பயிரின் வளர்ச்சியைத் தூண்டக் கூடிய புதிய ரசாயனப் பொருள் ஒன்றை டோக்கியோ பல்கலைக்கழக அராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

## கம்பனே கவிஞன்

—இ. நாகராஜன்—

பாலொடு பாகைத் தேனைப் பாவினில் அடக்கித், தெய்வ
சீலமும் தெளிவும் சேர்த்துச், செம்மலாம் இராக வன்தன்
கோலமும் குணமும் கூட்டிக், குவலயம் போற்ற எந்தக்
காலமும் கண்டி டாத கவின்மிகு கவிதை தசதான்.

கூவிடும் குயிலின் ஓசை குலவிட, மயில்கள் இன்பப்
பாவிசை கேட்டு ஆடப், பரவையும் அலைகள் கொண்டு
தாவியே அசைந்து ஆர்த்துத் தாளமே தட்டக், கேட்போர்
நாவினில் இனித்து, நெஞ்சில் நறுஞ்சுவை நண்ணச் செய்தான்.

காவிரி அழகால் கண்ட கவினுறு கங்கை, இன்பப்
பூவிரி பொழில்கள், வண்ணப் புலங்களின் செழுமை, வானை
மேவிய வரைகள், வீணை மீட்டிடும் நதிகள் யாவும்
பாவிலே ஓவி யம்போல் பளிச்சிடும் கம்பன் கையால்.

உண்மையை உயர்வைத், தங்கை உயிரினைப் போற்றும் உள்ளத்
திண்மையைத் தெளிவைத் தீரச் செயலினை, வீர வில்லின்
வன்மையை வளப்பை வாழ்வை வளர்த்திடும் அறத்தை, ஞான
ஒண்மையை ஒருங்கே ஊட்டும் ஒளிவிளக் காவான் கமபன்

ஆதிவான் மீகிக் கேற்ப அறத்தொடு, தமிழன் பண்டை
நீதியை, நெறியை, நேர்மை நிலைபெறச் செய்த உண்மைக்
காதலை, அண்ண னுக்காய் கடனென விரதங் காத்த
சோதரர் தூய அன்பை, துலங்கிடச் சொன்னான் கம்பன்.

சீரிய அறங்கள் யாவும் தெளிவுடன் ஆரும்ப் பாய,
நேரிய ஆசா ரத்தின் நிலையெலாம் கலையாய் ஆக்க,
கூரிய மதியால் வண்ணம் குலவுறு காவி யத்தில்
சீருறச் செய்து தெய்வ சீர்த்தியைப் பெற்றான் கம்பன்.

பாடுவோர் அனந்தம் இன்றே, பயனுள பாடல் என்று
கூடுவார்; குதிப்பார்; கூட்டம் கூடியே மாலை போட்டு
ஆடுவார்; களிப்பார்; மற்றோர் ஆக்கிய கவியைச் சொல்லால்
சாடுவார்; தங்கள் பாடல் சாவதைக் கண்ணுற் காண்பார்!

காலையிலே தோய்ந்து, காலக் கடலிலே மிதந்து, கம்பன்
நிலையிலே நிலைத்து. யாண்டும் நேரிலாத் தமிழன் னைக்கு
உலகிலே மதிப்பை ஊட்டி, உயர்வுற வழியும காட்டும்
அலகிலாச் சுவையோ டான்ற அமர காவியமே செய்தான்.

உம்பரும் உணரா ஞானம் உடையனும், உளத்தால் சீல
நம்பியாம் இராக வன்தன் நவையறு அருளைம் பெற்று,
அம்புவி உய்யப் பாவால் அமைவுடன் காதை செய்த
கம்பனே கவிஞன் என்ற கருத்தினுக் குரிய னானே!

# ஞானக் கவிஞன்

— "சொக்கன்" —

மேடை நடுவிலே ஒரு தூண்டாமணி விளக்கு ஒளி கான்றவண்ணம் இருக்கின்றது. வெள்ளிச் சுடர் விரிக்கும் தாடியோடு, சாந்தமும் அருளுங்கனிந்த முகத்தராய்த் தவிசொன்றிலே கம்பர் கண்களை மூடித் தியான நிலையிலே இருக்கின்றார். அவருக்கு இருபக்கங்களிலும் கற்றுச் சொல்லிகள் இருவர் அடக்கத்தோடு அமர்ந்திருந்து, ஏடு, எழுத்தாணிகளுடன் கம்பரது திருவாயினின்றும் பிறக்கப்போகும் கவிதைகளுக்காய்க் காத்திருக்கின்றனர்.

கம்பர்:

வானின் றிழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும் போல்
உள்ளும் புறனும் உளவென்ப
கூனும் சிறிய கோத்தாயும்
கொடுமை இழைப்பக்கோல் துறந்து
கானுங் கடலும் கடந்திமையோர்
இடுக்கண் தீர்த்த கழல் வேந்தை.

(கண்களைத் திறந்து கற்றுச்சொல்லிகளைப் பார்த்து) கொடுமனக் கூனியின் குறைமதி காட்டும்நெடுவழி சென்றிடர் நெருங்கியு மறியா மடமையள்கேகய மடந்தையின்வாயில் நடந்திடு குரிசிலை நடுவழிப்பிரிந்தோம். மாதவா! வேலவா! மாறிடா விதியின் சேதியைத் தொடர்ந்தே செப்புவன் கேளிர்...... உம்......இறுதிப் பாடலை எடுத்துரை.

மாதவன்:- சித்தம். கவிதைச் சித்தரே, கேட்பீர்... (பாடுகிறான்)

நின்றவன் தன்னை நோக்கி
இரும்பினால் இயைந்த நெஞ்சில்
கொன்றுறழ் கூற்றம் என்னும்
பெயரினிற் கொடுமை பூண்டாள்
இன்றெனக் குணர்த்த லாவது
ஏயதே என்னில் ஆகும்
ஒன்றுனக்கு உந்தை மைந்த!
உரைப்பதோர் உரையுண் டென்றாள்

கம்:- நன்றினி மேலே செல்வோம்.

வேல:- ஆஹா!

(மாதவனும் வேலவனும்ஏட்டுக்கட்டுக்களைப் பிரித்து எழுத ஆயத்தமாகின்றனர்)

கம்:- எந்தையே ஏவநீரே உரைசெய இயைவ துண்டேல், உய்ந்தனன் அடியேன் என்னில் பிறந்தவருளரோ வாழி, வந்ததென் தவத்தினாய வருபயன் மற்றொன் றுண்டோ, தந்தையுந் தாயும் நீரே தலைநின்றேன் பணியின் என்றான்.

கம்:- (சிறிதே நகை மலரத் தொடர்கிறார்)

'ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீ போய்த், தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு, பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி, ஏழிரண் டாண்டின்வாவென் றியம்பினன் அரசன்' என்றாள்.

வேல:- ஐயகோ! சற்றும் அஞ்சாதரசனைப் பிழைக்கச் செய்யும், பொய்யினைக் கொடுமைதன்னைப் புகல்கின்றாள்.... பாவி!

மாத:- மேலே சொல்க.

கம்:- இப்பொழு தெம்மனோரால்
இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச்செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பவ்
வாசகம் உணரக்கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா!

மாத:- 'அப்பொழு தலர்ந்த செந்தாமரையினை வென்ற தம்மா!' ஆஹா! அருமை! அற்புதம்! அல்லியாண் டலமந்த மேனி அழகனின் அருளுக்கிந்த, எல்லையில் முகத்துச் செவ்வி ஏற்பதே!

கம்:- (வேலனை நோக்கி) செப்பருங் கொடிய செய்தி செவிவழிச் சென்ற போதும், ஒப்பரும் குணத்தி ராமன் உளத்தினிற் சலனம் இல்லை, அப்பனே! வேலா! யாதும் அறைந்திடா திருத்தல் ஏனோ? ஒப்பிலை போலும்......

வேல:- ஆமாம்!

மாத:- என்ன?

வேல:- பாவல! உமது பாட்டில் பிழையினைக் கண்டேன் அல்லேன்...... ஆனால்

கம்:- தயக்கமேன்...... எடுத்துச்சொல்வாய். தக்கதாய் இருப்பின் ஏற்பேன்:

வேல:- கவிக்கடல் தாங்கள்......யானோ :எந்திரப்பொறியை ஒத்த நவையுறு கற்றுச் சொல்லி......

கம்:- 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு. ஆதலின் சிறிதும் அஞ்சாதுரை குவை. கருத்தை யானும், சோதனை செய்து பார்ப்பேன். ஏற்குமேல் ஏற்பேன் என்றன் உள்ளத்தை அறிவாய் அன்றோ? உரைத்திடு......

வேல:- காதலால் இராமன் மீதே கரையிலா தன்பைச் செய்யும், சேதியை அறிவன்... தங்கள் காவியக் கோவில் முற்றும், மீதியே இன்றி நின்று விளங்குவன் இராமன்......... உண்மை...ஆனால்......

மாத:- (பொறுமையை இழந்து) வேலவா! வீணிற் பேசிக்காலத்தை வீணக்காதே.... கூறுவவுளவேற் கூறு...கவிக்கடற் கணைகட்டாதே!

கம்:- பொறுத்திடு மாதவா! மழை முகிற்கிடையே வெட்டி மலர்ந்திடும் மின்னல் போல அழகிய கருத்தைச் சொல்லி ஆற்றிடைப் படுத்தும் ஆற்றல் பழகிய பண்பன் வேலன் பகரட்டும். வேலா! சொல்க.

வேல:- என்னதான் தெய்வத்தன்மை இருப்பினும் இந்தப் போதில், முன்னையிற் சிறந்து நின்று முளரியாய் ஒளியைக் காலல், அண்ணலாம் இராமனுக்கே அடுப்பதோ? சற்றும் மாற்றம் அவனிடை ஏற்படாதோ? எண்ணரும் தவத்தின் மிக்க ஏந்தலே எனினும், மாலே அண்டர்தம் துயரைப்போக்க அடைந்தனன் எனினும் இந்த, இந்த மண்ணுடைக் குணங்கள் முற்றாய் மறையுமோ? மறைந்தால் வெற்றுக் கற்பனை என்றே உங்கள் காவியந்தன்னை எள்ளி, மற்றவர் தள்ளிடாரோ? மாண்புடைத் தமிழருள்ளம்... மகாகவி! அறிவீர் நன்கு!

கம்:- அப்பொழு தலர்ந்த செந்தாமரையினை வென்ற தென்றே, செப்பிய உவமை சற்றே மிகை படக் கூறல் ஆகும். ஒப்புதல் இயலாதென்றேயுரைக்கின்றாய்?

வேல:- குற்றமாய்க் கூறல் இல்லை......கவிதையின் வேந்தர் தாங்கள்...... சற்றென் தன் கருத்தைச் சொன்னேன்.........தவறெனிற் பொறுத்தல் வேண்டும்.

கம்:-(கம்பீரமாகக் கரத்தைச் சிறிதே உயர்த்தி) தவறுதல் இயற்கை, அஃதில் தவறில்லை! ......மாதவன் கருத்தும் கேட்போம் ......மதிவல! நீயும் சொல்வாய்.

மாத:- மிதிலையின் நிலாமுற்றத்தே சீதையை நிறுத்தி வைத்துப் பதியவனிராமன் பார்வைபட்டிட வைத்தே காதல், உதயமங்குறவே செய்தெம் பண்பினைக்காத்தீர் ஐயா! மதிநிறை புலவரேறே! மாண்புடைத் தமிழர் வாழ்க்கை, எதுவென உமக்கு யாங்கள் இயம்புதல் இழுக்கேயாகும்!

கம்: இழுக்கின்றாய்...தெளியக் கூறு...

மாத: காந்தமென ஈர்த்திழுக்கும் பொருளின் மாட்சி கனியமுதப் பிழிவனைய சொல்லின் ஆட்சிவாய்ந்திடுநற் கவிஞருக்குத் திலகம்! அன்னாய்! வாழி நீ எனது சிறு சொல்லைக் கேட்டாய் ஏந்துமெழிற் றாமரையின் எழிலை வெல்லல் இராமனுடை வதனத்திற் கெளிதே ஆனால் சாந்தமொரு மகிழ்வினையே காட்டும் நேரம் தக்கதோ என்றுகணை மெண்ணல் வேண்டும். வேந்ததுனைச் சொல்கேட்டு மவுலி ஏற்க விரைகின்ற போதினிலே 'கானஞ் செல்வாய்' என்றுரைக்கு மக்கணத்திற் சிறிதேயாதல் இருள்படரல் உலகியற்கை மனிதப் பண்பு. கொன்றிடவே அணைவாரை அருள்வர் யோகர். கோமகனாய்ப் பிறந்திட்ட ராமன், நீதி அன்றதுவென் றறிந்த பெருவான்மீகியும் அக்கணத்தி விராமனிலே சீற்றங் கண்டான் தன்னுடைய வுரிமையினை இழகக நேரின் தரணியினை அழித்தலன்றோ வீரம் ஐய!

கம்: (சிறிதே நகைத்து) வீரத்தைக் காட்டுவதும் அன்னை மீதா?

மாத: அன்னை! அன்னையென்ற சொல்லிற்கே கறையைத் தந்த, அரக்கியினை அவ்விடத்தே கோறல்விட்டுப், பின்னையவள் சொல்கேட்டு முகமலர்ந்து பிழையினை நாட்டவர்க்குத் தந்தே நாட்டை, மின்னொளியின் கணத்திடையே துறந்தான் ராமன்! மெச்சத்தான் வேண்டு மவன் பண்பை நன்கு!

வேல: மரம்விட்டு மரந்தாவும் மந்தி போல. மாதவா! பொருளைவிட்டுச் செல்கின்றாய் நீ. அரியனைய ராமனிலே குறைசொல் கின்றாய். அதுவன்று நம்முடைய வாதம் தம்பி! வரம்பாகத் தந்தையது வாக்கைக் காத்து, வனஞ்சென்ற அண்ணலது பண்பு வாழி! நரனாக வந்த அவன் சிறிதே யாதல், நரத்தன்மை காட்டாமை ஏனோ என்றோம். அதுவேநம் வாதம் ஐய!

கம்: நரனிடத்தே தெய்வநிலை எய்தா தென்று, நம்புகின்றீர் எடுத்தெமக்கும் உரைக்கின்றீர் நீர், புராதன மாம் வடமொழியி விராமகாதை, புகல்கின்றீர் மனிதநிலை அதுவே என்பீர், வரையனைய தசரதனின் சொல்லைக் கேட்டும், மணிமுடியைக்கவித்திடுநற் செய்தி கேட்டும், சிரந்தாழ்த்திக் கட்டளையை ஏற்றானன்றிச், சிறிதேனுந் துளங்காது நின்றான் அன்றோ... நினைவுண்டோ?

வேல: (யோசித்து) ஆ! தெரிகின்றது.

தாதையைப் பரிகரைசெயத் தாமரை கண்ணன், காதல் உற்றிலன் இகழ்ந்திலன் கடன் இதென்றுணர்ந்தும்.

மாத: யாது கொற்றவன் ஏவிய ததுசெயல் அன்றோ? நீதி எற்கென நினைத்துமப் பணிதலை நின்றான்.

கம்: தந்தை சொல்லினற் றாணியை ஏற்றனன் மைந்தன் தந்தை சொல்விடத் துறந்ததிற் குறைஏதும் உளதோ?

வே: துறந்ததிலே குறை ஒன்றும் இல்லை ஐயா!

தூயனவன் செய்கையிலே கறையும் இல்லை. நிறைந்திட்ட அன்போடு முடியைச் சூட்டும், நற்செய்தி சொல்லுதற்குச் சென்றான் தன்னை. "உறைந்திடடா கானகம் நீ; பரதன் மன்னன். உனக் கெதுவும் இல்லை"யெனச் சொல்லக் கேட்டு, குறைந்திடாப் பொலிவோடு மேலும் ஓகை, கொண்டதுதான் ஏனென்று கேட்கின்றோம் நாம்.

மாத: கவிதையெனல் இயற்கையென்ற தரையில் வித்தாய்க், காலத்தோடியைந்து நின்று மனிதப் பண்பைப், புவியிடத்துக் கனியாகத் தருதல் வேண்டும், பூதலத்தை விட்டெழுந்து செல்லா தென்றும், செவிவழியாச் சென்றுள்ளம் நிறைத்தல் வேண்டும். சிந்தனையைத் தூண்டிடவும் வேண்டும் மேலும், கவிஞரும் அமரனவன் வந்திட்டாலும், காலத்தோடியைந்து தான் நடத்தல் வேண்டும். மனிதவுளத் தன்மைக்கு மாறாய் நின்று மாண்பெல்லாம் போதித்தல் சாலாதையா! புனிதனவனிராமனுடை புகழைச் சொல்லப், புதுமைகளைப் புகுத்துகின்ற கவிஞர் கோவே! இனியவரே! கவிவானின் ஒளியே! ஏழை, எங்களையும் மதித்தெங்கள் உரையைக் கேட்டீர், மனிதநிலை தனைமீறி மேலே செல்லல், மாண்பதுவோ எனநினைத்தே சொன்னேம், ஐயா!

கம்: உலகதன் இயற்கை உணர்ந்துதான் உள்ளேன். இளைஞரே! இந்த இகத்திலும் தேவர்கள் உள்ளனர். தேடியே காண்பதெங்கட்ன். சற்றே பொறுத்திரும். சாம்பவன் வருவன். மனிதப் பண்பதின் மாண்பினைச் சிறிதே அவனிற் காண்பீர். அதன்பின் பேசுவோம்.

மாத: சாம்பவன்?

வேல: கரடியைப் போல் மயிர்க் கற்றையைக் கொண்டோன் மரமெனப் பெருந்திடு யாக்கையன் மாண்பிலாக் கொடியவன். மதுவிற் குளிப்பவன் வம்புச் சண்டைகள் செய்பவன், சழக்கன் அவனிலே மனிதனின் பண்பினைக் காண்பதா?

கம்: ஆம்! தம்பி! நீரறியப் பலவும் உண்டு. அமைதியினைச் சில கணங்கள் காத்தல் வேண்டும்.

[மேடையின் உள்ளிருந்து இரு குரல்கள் ஒலிக்கின்றன. குரலுக்கு உரியவர்கள் சாம்பவன், அவன் மாமன் தூஷணன் ]

மாம: வாவென்றால் வருதல் வேண்டும். மடையனே! வாடா பின்னால்.

சாம்: (வெறியால் தளர்ந்த குரல்).


முடியாது முடியா தென்று மும்முறை சொல்லிவிட்டேன் அடியாதே விட்டிடென்னை அடியினில் வீழ்கின்றேன் நான்.

(8-ம் பக்கம் பார்க்க)

பாதங்களுக்கு இலஸ்டோ
காலணிகள்
அளிக்கும் பாதுகாப்பு
அவசியமானதே



வெறுங்காலில் நடப்பதனுல் கூர்மையான கற்களினுலோ, மற்றும் பொருட்களினுலோ, பாதங்கள் வெட்டுபடக்கூடும். கிருமிகள் உட்பிரவேசித்து தொற்று நோய் பரவ ஏதுவாகும். மலர் இதழ் போன்ற பஞ்சு மெத்தை சொகுசுள்ள இலஸ்டோ காலணிகள் அணியுங்கள். பாதங்களை குளுமையாக வைத்திருக்கும் இலஸ்டோ காலணிகள் காற்றைப்போல் கனக்குறைவானவை, வளையுந்தன்மையுடையவை, நீடிய பாவனைக்கு உத்தரவாதம் பெற்றவை.




இலஸ்டோ போம்ட்ரெட்ஸ்

47/65

# ஞானக் கவிஞன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மாம: ஏனடா! அவர்தாம் பேயா பூதமா? பிசாசா?சொல்வாய்!

சாம்: பேயலப் பூதமல்லப் பிசாசல, மனிதன் மாமா! நாயென வாழும் என்னை நகைத்தலைத் தாழல் மாட்டேன். போய்விடு என்னை விட்டுப் புன்மையன் வாழ்வை விட்டே! தாயெனக் கருணை கொண்டு, தன்பக்கம் அழைப்பர், தாழேன்!

மாம: போதுமுன்; பிதற்றல்; வாடா.

[இருவரும் உள்ளே நுழைகின்றனர். சாம்பன் திரும்பி ஓட்ப் பார்க்கிறான். தூஷணன் அவனை இழுத்துவந்து கம்பர் முன்பு நிறுத்துகின்றான். மாதவனும், வேலவனும் ஏளன நகை நகைக்கின்றனர்.]

கம்: (இரக்கத்தோடு)

மதுவெறி அரக்கன் என்றும், மாண்பிலாப் பேயன் என்றும், கதி அறி வில்லாக் கீழோன் கடையன் நீ என்றுஞ் சொல்லிக், கொதித்திட வைப்பர் உன்னைக், குரிசிலே! அஞ்சேல் வாராய்! விதியினுற் பிழைத்த உன்னை விழிநீரால் வரவேற்கின்றேன்!

சாம்: (கம்பரின் காலடியிலே விழ்ந்து.)

ஐயனே போற்றி! ஆன்ற அறிவினின் மலையே போற்றி! நையுமென் நெஞ்சம் மெய்யும்; காயனே! உனக்கே சொந்தம்.

(கம்பர் எழுந்திருந்து அவனைத் தழுவுகின்றார். அவன் அஞ்சி விலகுகின்றான், எல்லோரும் வியப்புடன் அவர்களை நோக்குகின்றனர்.)

கம்: தூஷணு! நிகழ்ந்த துன்றன் வாயினுற் சொல்லல் வேண்டும்.

தூஷ: கல்வியின் கடலே ஞானக் கவிஞனே கம்பநாடா! சொல்கிறேன் சொல்லிச் சொல்லித் துய்ய வாய் சலித்துப் போனேன். எல்லையில் செல்வம் வைத்தே ஏகிய தந்தை சொன்ன சொல்லையே தலைமேற் கொண்டு செல்வத்தைத் துறக்கின்றுனும்.

கம்:- சாம்பவ! மதியின் மிக்காய்!, சஞ்சலம் அறியாத் தூயோய்!, தேம்பினை! துயரங் கொண்டாய், சிற்றன்னைவருத்தலாலே. ஆம் பொருட் பங்கை ஏற்றே, ஆனந்தம் பெறுதல் விட்டுப், போம்படி விட்டே நிற்றல், புகழதோ சொல்வாய் ஐய!

சாம்:-(விம்மியபடி) சோதனை செய்யலாமா? சோதனை செய்யலாமா? தந்தையின் சொல்லைத் தட்டும் தருக்கனுய் ஆக்கலாமா? இராமனின் கதையைக் கூறி இருண்ட என் வாழ்வைத் தூய்மை, விரட்டட வைத்த மேலோய்! விளம்புதல் தகுமோ? சொல்க.

கம்:- சொல்வதென்? விளங்கச் சொல்வாய்.

சாம்:- முன்னருஞ் சொன்னேன் இன்னும், உரைக்கின்றேன் கேண்மின் என்றன், அன்னையுஞ் சாகத் தந்தை, அழைத்து வந் திட்ட பெண்ணுள், என்னையும் வருத்தி னின்ருள், இளையதாய் வெறுத்தேன் நாளும், அன்னவள் தன்னைக் கொல்ல, அடுக்கணி செய்தேன் ஆனால், நோயினும் முதுமை யாலும் நூலென மெலிந்து நின்ற, தாயெனுந் தந்தை சாவைத், தழுவிடு காலை என்னைப், பாயருகழைத்துக் கண்ணீர் பாய்ந்திடக் குழந்தாய் காளுேர், பாவியுன் வாழ்வைப் பாழாய், ஆக்கினன் என்ன செய்வேன். வந்தவன் காலனுள் வாயிலேன் ஊமை யாகித், தந்தனன் கண்ணீர் துன்பம் தாங்கிமைறந்தி இன்றே, உந்தையை மன்னித்துன்றன். சிற்றன்னை காத்தி என்றே, வந்தித்து மறைந்தான் அன்றும், வைரமும் மாய்ந்த தில்லை.

அன்ருெரு நாள் நீ சொன்ன அழகிய ராம காதை, கொன்றதென் குறைகள் இன்று, குவலயம் வரினும் என்றன், தந்தைசொல் மீறேன் என்றன், தாய்க்கு நான் தீமை சூழேன், எந்தையே போல்வாய் என்னை இன்னமும்வருத்தல் வேண்டா!

தூஷ:- பாருங்கள் இவன்றன் செய்கை பரந்த நல் வயல்கள் மாடும், ஏரொடு வீடு செல்வம் எவையுமே வேண்டாம் என்றே, நிற்கிருன் அழுங்கைப் போன்று. நீங்கள் தாம் திருத்தல் வேண்டும்.

கம்:- (கண்கலங்கப் பேசாதிருக்கின்றார். கற்றுச் சொல்லிகள் மலைக்கின்றனர்) 'உண்மையைச் சொல்வாய் தம்பி! உயர்திரு உனக்குத் தூசா?

சாம்:-(கம்பீரமாக நகைத்து) கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணகல், பிச்சமும் கவிகையும் பெய்யும் இன்னிழல், நிச்சயம் அன்றெனில் நொடிது நான் உண்ட, எச்சிலை நுகருவது இன்ப மாகுமோ?

கம்:- (பெருமூச்சு விட்டு) சொல்லினைக் கவிதையாக்கும் தொழிலினன் நானென்ருல் நீ, சொல்லினை வாழ்க்கையாக்கித் தூய்மையில் திளைக்கின்ருயே.

சாம்:- மதுவுண்பவ னருளற்றவன், மடையன் கொடு விடனுன், விதியின் கர முறுகின்றதொர், ஆடற் சிறு பாவை, கதியற் றவ னடமற் றவன், கடையன் சிறு புலையன், மதியற் றவனெனினும் மென. தத்தன் கடன் மறவேன்!

(சிரித்தபடி அவ்விடத்தை விட்டு நீங்குகிருன் பெருமூச்சு விட்டபடி)

தூஷ:- கண்கள் செய்த பாவமிது, காணேன் இனி ஒளியை!, (செல்கிருன்)

கம்:- (தனது ஆசனத்தில் அமர்ந்தபடி கம்பீரமாக)

மதுவுண்டு தன்னினைவை இழக்கும் போதும், மறச்செயல்கள் இழைக்கின்ற கொடிய போதும், எது செய்த போதினிலும் இழிவாம் சேற்றில், இரவு பகல் புரள்கின்ற போதும் கொள்கை. மதுவொன்று வெறியினிலே நிலைக்கும் பண்பன், மாண்பனைத்தும் அடிவருடும் மன்னர் மன்னர், இதுவரையெம் மிடைநின்றே இருளைப் போக்கி, ஏந்தலென உயர்ந்ததனைக் கண்டீர் நன்கு!

சாம்பவனின் தன்மையிது வாகும் என்ருல், சால்புக்கே கட்டளைக்கல் ஆகி நின்று, ஓம்பிய நல் லறத்திற்கே உரையாய் ஓங்கி, உண்மையினுக் குறுதுணையாய் உதயஞ் செய்து நாம்பலவாய்ப் புகழ் செய்து துதியே கூற, ஞாலத்திற் பெரியவனுய் உயர்ந்த நம்பி, தேம்புமழை முகிலனையகொண்டல் எங்கள், சீராமன் முகமலரச் செப்ப லாமோ?

கவிதையெனில் உலகத்தின் புனிதங் கெட்ட, கடைநிலையைக் கூறுவதற் கெழுவ தன்று செவியினிக்கும் சொற்களினுல உண்மைத் தாய்க்குச், சீரற்ற வெறியினையும் ஊட்டல் அன்று புவியினுககே யணியாக ஆன்ற தான, பொருள் தந்து நற்புலத்தே செலுத்த வல்ல, கவிதைகளே அணிபெற்று நாளும் வாழும், காசினிக்கே உயிராகி வாழும் கண்டீர்.

தெய்வ நிலைவைத்தெனதிராமன் தன்னைத், தேயமெலாம் தொழவைப்ப தென்றன் எண்ணம், ஐயனை ஆழ் கடலனைய நிறத்தான் தன்னை, அமரர்க்கும் அமரனும் அறிவன் தன்னை உய்விக்க உலகத்தில் வந்தான் தன்னை, ஒருபோதும் மனித மணம் வீச வையேன், எய்து மரம் ஏழினையும் துளைத்த நம்பி எய்தவரி தாகியதோர் இலக்காம் கண்டீர்.

மலைமீதில் ஏறுகின்ற மாந்தர் கூட்டம், மருண்டு ருண்டு தவழ்ந்து நெறி காணல்போல அலையலையாய்ப் பிறக்கின்ற மனிதக் கூட்டம், ஆயுளெலாம் முனைந்துருண்டு முயன்ருராலுல், அலைமுகிலின் எழிலொழுகு காட்சியானின், அடித்தூசினளவாக வளர்வர் கண்டீர்.

கம்:- (சிறிது நகைசெய்து) ஏற்பீரோ?

கற்+சொ:- (காலடியில் வீழ்ந்து)

கவிதையினுக் கிலக்கணத்தைச் சொன்னுய் வாழி! காவியத்தின் தனித்துணையே வாழி! வாழி! கம்பனெனும் கவிவலனே வாழி! வாழி!

# சுவையான ஒரு சம்பவம்!

(வித்துவான் பொன்முத்துக்குமாரன்)

நகருக்கு அழகுசெய்வது போல நறுமலர்ச் சோலை இருந்தது. அந்த மலர்ச்சோலை காதலருக்கு அரியதொரு விளையாட்டிடம். மாலையில் அங்கு வரும் காதலர்கள் மலர்களைப் பறித்து மாலை தொடுத்து ஒருவருக்கொருவர் சூட்டியும், செய்குன்றில் அமர்ந்து தீஞ்சுவைப் பாடல்கள் பாடியும், கை பிணைந்து உலாவியும் களிப்பர். அற்புதமான இன்பக் காட்சிகளை அந்த அழகிய மலர்ச்சோலையில் ஒவ்வொரு நாளும் காணலாம்.

ஒரு நாள் அந்த நகரத்து மக்கள் அனைவர்க்கும் இன்பம் நிறைந்த திருநாள். அந்தத் திருநாளை ஆனந்தமாகக் கழிப்பதற்கு அந்நகர மக்களனைவரும் அப் பூஞ்சோலைக்குச் சென்ருர்கள். அங்குசென்ற காதலர்களது காதல் நினைவுகளைக் கூற வேண்டியதில்லை. மலர்ச்சோலையை அடைந்த இரு காதலர்கள்—தலைவனும் தலைவியும் இந்த உலகத்தையே மறந்தார்கள். ஆடவனே மலைபோன்றுயர்ந்த வலிய தோளினன்; மன்மதவடிவினன்; போர் என்றதும் பூரிக்கும் வீர உள்ளத்தினன். அவளோ மேகம் போன்ற கரிய கூந்தலும் அன்னநடையில் ஒரு சின்ன நடையும் உடைய ஓர் அழகி. மன்மதனை ஒத்த அந்தக் காளை தன் மனதைக் கவர்ந்த அந்த மங்கையின் கூந்தலில் சூட்டி மகிழ மலர் பறித்துக்கொண்டிருந்தான். அழகும் மணமும் நிறைந்த மலர்களை ஆராய்ந்து பறித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனுடைய அந்தக் காதற்கன்னி அவனறியாத வகையில் பின்புறமாய்வந்து அவனுடைய இரண்டு கண்களையும் மெல்லப் பொத்தினுள். மலர் பறிப்பதிலேயே மனத்தைப் பறிகொடுத்த அக்காளை திடீரெனத் தன் கண்களைப் பொத்தினுர் யார் என்றறியாது திகைத்து 'ஆர்' என்ருன். அவ்வளவில் அவனுடைய கண்களை மறைத்த மெல்லிய கரங்கள் நெகிழ்ந்து விலகின. திரும்பிய அவனுக்கு அவள் அங்கு காணவில்லை. கார் காலத்துக் குயில் போல அவள் பேசாது சென்று சற்று அயலிலேயுள்ள பூங்கொடியொன்றைப் பற்றியவாறு கண்ணில் நீர் தேங்க நின்ருர். காரணம் அறியாத அவன் அவளது கலக்கத்தை நீக்கத் துடித்தான். 'ஆர்' என்றதும் அவள் ஏன் இவ்வாறு அழவேண்டும்?

அது அவனுக்குப் புலப்படாததுதான். ஆனுலும் அவள் நினைத்ததை ஒரு கணத்தில் அறிந்துவிட்டான். 'தான் கண்ணைப் பொத்தியதும், வேறு யார் கண்ணைப் பொத்தக்கூடும்? தன் காதலிக்குத் தானே அந்த உரிமை உண்டு என்று அறியாது அவன் 'ஆர்' என்றமையால், அவனது கண்ணைப் பொத்துதற்குத் தன்னைவிட வேறு காதலியரும் அவனுக்கு உண்டுபோலும்! அங்ஙனமாயின் இவன் என்மீது வைத்த அன்பெல்லாம் பொய்யா? என எண்ணியே அந்நங்கை கலங்கினுள். இதனை உணர்ந்த அந்தக்காளை, 'ஆர்' என்றதும் அயர்ந்து வாடினுயே. 'ஆர்' என்று யான் கேட்கவில்லை.

'ஆரணங்கே, ஆரமுதே'என அன்போடு உன்னை அழைத்ததற்கு 'ஆர்' என்று தொடங்கும் போதே நீ அறியாது என் அன்பில் ஐயுற்ருயே' என்று தேற்றினுன். ஊடலைச் சாதுரியமாகத் தீர்த்த ஆடவனின் அன்பினை நினைந்து அந்நங்கை இன்பில் திளைத்தாள்.

கம்:- (ஆசீர்வதித்து) எழுக, எழுதுக.

(கற்றுச்சொல்லிகள் எழுதத் தொடங்குகின்றனர்) (பாடுகிருர்)

மன்னவன் பணியன்ருகில், நும் பணி மறுப்பனே என், பினைவன் பெற்ற செல்வம், அடியனேன் பெற்ற தன்ருே. என்னிதின் உறுதி அப்பால், இப்பணி தலைமேற் கொண்டேன், மின்னுெளிர் கானம் இன்றே ஏகின்றேன் விடையுங் கொண்டேன்.

(திரை)

((பின்னணியில்)

இம்பர் நாட்டிற்செல்வமெலாம், எய்தி அரசாண் டிருந்தாலும், உம்பர் நாட்டிற் கற்பககா, ஓங்கு நீழல் இருந்தாலும், செம்பொன் மேரு அனையபுயத், திறல் சேர் இராமன் திருக்கதையிற், கம்பன் நாடன் கவிதையிற் போல், கற்ருேர்க்கு இதயம் களியாதே.


# ஒஸ்டர்மில்க்

குழந்தைகள் அழகாகவும் ஆரோக்கியமாகவும் திகழ்கிருர்கள்




தாய்பால் ஊட்டமுடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதா மற்போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்ப முடியும். ஒஸ்டர்மில்க் திடகாத்திரமான சுகவளர்ச்சிக்கு அவசியமான இரும்புச்சத்தும், விட்டமின் டி யும் கொண்ட சுத்தமான பால் ஆகாரம்.

குழந்தை ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வதைக் கண்டு ஆனந்தமடையுங்கள்

# ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ—அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு.

## வானொலி நிகழ்ச்சிகள்

### சனி 27-6-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 2-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை — கே. ராமச்சந்திரன், 7-45 மூவரிசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைஇசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 7-00 பாட்டு — லீலா துரைசிங்கம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 'எனது பிரித்தானிய அநுபவங்கள்' — எஸ். செல்வநாயகம், 9-30 வயலின் — மணிஐயங்கார், 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு 28-6-64

காலை 6-45 பாமாலை, 6-50 கிறிஸ்தவநற்சிந்தனை — வண. ஜே. ரத்தினராஜா, 7-15 மூவரிசை, 7-45 மெல்லிசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி (மறு ஒலிபரப்பு, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை.

பகல் 11-30 சிறுவர்மலர், 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு — ஸ்ரீமதி இந்திரா பாலசுப்பிரமணியம், 5-45 திரைக்குரல்.

இரவு 6-15 ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய கோவில் அஞ்சல், 7-15 'நாடக அரங்கு' — 'சிங்கைநகர் இளவரசி' — அருள் செல்வநாயகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 மாணவர்மன்றம், 9-15 மாதர்விருப்பம், 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலையஒலிப்பதிவுகள்.

## இந்திய விஞ்ஞானிக்கு பிரிட்டிஷ் பத்திரிகை பாராட்டு

லண்டன், ஜூன் 26

வான இயல் பிரபஞ்சப் படைப்பு ஆகியவை குறித்து புதிய கொள்கைகளை வெளியிட்டுள்ளவரான பேராசிரியர் ஹாயிலுடன் 25 வயதான இளம் இந்திய கணிதவல்லுனர் டாக்டர் ஜயந்த் விஷ்ணு நர்லிகாரின் பெயரையும் இணைத்து பிரிட்டிஷ் பத்திரிகையான 'ஒப்சேர்வர்' வார இதழ் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

பேரசிரியர் ஹாயில் டாக்டர் நர்லிகார் ஆகிய இருவருக்கும் சடந்தவாரம்ராயல் சொஸைட்டிக கூட்டத்தில் தாங்கள் இருவரும் சேர்ந்து உருவாக்கிய புதிய கொள்கையை வெளியிட்டனர். இவை பிரதேச பௌதிகத்தில் ஆழ்ந்த விளைவுகளை விளைவிக்கக்கூடிய வகையாகும், மிகவும் குறிப்பிடத்தக்கன புதிய புவி ஈர்ப்புக் கொள்கையின் விளைவுகளை அவர்கள் எடுத்துக்கூறினர். பிரபஞ்ச வெளியில் மிகத் தொலைவில் உள்ள நட்சத்திரங்கள் அழிந்துபோகுமேயானல் சூரியன் இப்போதுள்ளதைவிட 100 மடங்கு ஒளிமயமானதாகிவிடும். பூமியிலுள்ள மனிதர்கள் எடை இரட்டிப்பாகிவிடும் என்பதே இந்த விளைவுகளில் அடங்கியுள்ள விபரமாகும்.

ராயல் சொஸைட்டிக் கூட்டத்தில் சலந்துகொண்டவர்களில் ஒரு சிலரால்தான மேற்படி இருவரும் வெளியிட்ட கொள்கையின் கணிதசூததிரங்களைப் புரிந்துகொள்ள முடிந்தது என்று 'ஒப்சர்வர்' குறிப்பிட்டுள்ளது.

## கைத்தொழில் ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை கல்விப் பகுதி கைத்தொழில் ஆசிரியர் சங்க 17-வது வருடாந்த பொதுக் கூட்டம் இன்று மருதானை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுகின்றது.

# நான் ஒருபோதும் பொய் கூறியதில்லை

## புரட்சி சதி வழக்கில் திரு. பீலிக்ஸ் சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

'நான் எனது வாழ்நாளில் ஜனப்பிரதிநிதிகள் சபையிலோ அல்லது வெளியிலோ ஒருபோதும் பொய் கூறியதில்லை. பயனியர் பட்டாளத்தினர் மட்டுமே அழைக்கப்பட்டார்களென நான் பார்லிமெண்டில் கூறியிருப்பேனேயாகில் அது சரியாகவே இருக்கும். பார்லிமெண்டில் நான் கூறியதெல்லாம் சகல அம்சத்திலும் உண்மையானதே என்பது பற்றி நான் உறுதி கொண்டுள்ளேன்"

புரட்சிச் சதிவழக்கு விசாரணை நேற்றுக் காலை தொடர்ந்து நடைபெற்றபோது தற்போது உணவு விவசாய அமைச்சராக இருப்பவரும், புரட்சிச்சதி நிகழ்ந்ததாகக் கூறப்படும் காலத்தில் நிதியமைச்சராயிருந்த வருமான திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா, பெரும்பாலான எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி. குறுக்கு விசாரணை செய்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1961-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் திரு. பீலிக்ஸ் பார்லிமெண்டில் கூறிய சில விஷயங்கள் சம்பந்தமாக திரு. ஜி. ஜி குறுக்கு விசாரணை செய்தார்

விசாரணை ஆரம்பத்தில் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. ஏ. எச் சி. டி' சில்வா முந்திய விசாரணைதினத்தில் சாட்சிக்கு அட்டோர்ணி ஜெனரல் விடுத்த சில கேள்விகளுக்கு தாம் ஆட்சேபம் கிளப்பியதை இப்போது வாபஸ் பெற்றுக்கொள்வதாக நீதியரசர்களுக்குத் தெரிவித்தார். திரு. சி. செனிவரத்தின சாட்சியமளித்த சமயம் திரு ஜீரசிங்கா கோர்ட்டுக்கு வராததால் திரு. செனிவரத்தினவிடம் தாம் சில கேள்விகளைக் கேட்பதற்காக அவர் மீண்டும் அழைக்கப் படவேண்டுமென்றும் திரு. சில்வா கேட்டுக்கொண்டார்.

அட்டோர்ணி ஜெனரல் திரு. டக்ளஸ் ஜான்ஸ் கியூ ஸி. அடுத்து சில கேள்விகள் கேட்டார். அவரது கேள்விகளுக்கு திரு. டயஸ் பண்டாரநாயக்கா பதிலளிக்கையில், வெடி மருந்துப் பெட்டி ஜோன்பிள்ளையின் வீட்டில் கண்டெடுக்கப்பட்டதாயும் அது தமக்குச் சொந்தமானதென்று திரு. ஜீரசிங்கா கூறினரென்றும் தெரிவித்தார்.

இதன் பின் திரு. ஜி. ஜி தமது குறுக்கு விசாரணையைத் தொடர்ந்தார்.

திரு.டயஸ்பண்டாரநாயக்கா கூறியதாவது:-

பிரதமர்கள் மகாநாட்டுக்கு பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா புறப்படுமுன் நுவரெலியாவில் நான் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்போது யாழ்ப்பாணத்தில் நடந்துகொண்டிருந்த சத்தியாக்கிரகம் பற்றியும் அப்போதைய நாட்டு நிலைமை பற்றியும் பேச்சுவார்த்தை நடைபெற்றது. திரு. கே. எம். பி. ராஜரத்தின போன்ற எம்.பி.கள் பிரதமர் நாட்டைவிட்டு வெளியே செல்வதற்கு அப்போது ஆட்சேபம் தெரிவித்தார்கள்.

பிரதமர் நாட்டை விட்டுப்புறப்படு முன்னர் ராணுவ தளபதிகளுடனும் சேனல் உடுகமவுடனும் பேச்சு வார்த்தை நடத்தினர். சத்தியாக்கிரக இயக்கததைக் கட்டுப்படுத்த முயற்சிக்குமாறு பிரதமர் அறிவித்தார். அவசரகாலச் சட்டப் பிரகடனம் சட்ட மறுப்பு இயக்கம் பயமுறுத்தலுக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

இதன் பின்னர்தோட்டப்பகுதியில் வேலை நிறுத்தப் பயமுறுத்தல் தோன்றியது. இது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையமேற்கொள்ளலாமென. பிரதமர் என்னுடும் மற்ற மந்திரிகளோடும் குறிப்பாக நீதி மந்திரியோடும் ஆலோசனை நடத்தினர்.

வேலை நிறுத்தத்தைத் தூண்டுபவரது சொத்துக்களைப்பறிமுதல் செய்யும் வகையிலான அவசர காலச் சட்டத்துக்குட்பட்ட சட்ட விதிகளை நான் எடுத்துக்காட்டினேன். பிரதமர் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காகச்சென்ற பின்னர் நீதி மந்திரியும் நானும் அலரிமாளிகையில் கூடி சட்ட அமைப்பாளருக்கு இது பற்றி அறிவித்தோம். வேலை நிறுத்தத்தைத் தூண்டுபவர்களுக்கு அவசரகாலச் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்குவதற்கான சட்டத்துக்கு திருத்தம் கொண்டுவரப்பட்டது.'

## கொக்குவில் கிராமசபை தேர்தல்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொக்குவில் கிராம சபை பத்தாம் வட்டாரத் தேர்தலில் திரு. கதிர்காமர் சண்முகநாதன் 57 அதிகப்படியான வாக்குகளால்வெற்றியீட்டியுள்ளார். தேர்தல் முடிவுகள் வருமாறு:

கதிர்காமர் சண்முகநாதன்-349, பெரியதம்பி கனகசபாபதி-292, பொன்னையா செல்வரத்தினம்-37, சின்னட்டி முத்தையா- 11.

கொக்குவில் கிராம சபையின் தேர்தல்கள் அண்மையில் நடைபெற்ற பொழுது பத்தாம் வட்டாரத்தில் வாக்களிப்பு அபிப்பிராய பேதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இவ்வட்டார இடைத்தேர்தல் இப்பொழுது நடைபெற்றது.

## லண்டன் பாடசாலை கிரிக்கெட் கோஷ்டி

### அடுத்த ஜனவரியில் இலங்கைவரும்

கொழும்பு வெள்ளி

முதன்முறையாக லண்டன் பாடசாலை மாணவர்கள் கிரிக்கெட் கோஷ்டி ஒன்று இலங்கை வந்து கிரிக்கெட் போட்டிகளில் சலந்துகொள்ளும். லண்டன் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் முதலாவது குழு அடுத்தவருடம ஜனவரிமாதம் இலங்கைவரும்.

இந்தியாவின் அழைப்பின் பேரில் இவ்வருடம் டிசம்பர் மாதம் முதல் 7 வாரங்கள் இந்தியாவில் போட்டிகளில் கலந்துகொள்ள குறிப்பிட்ட லண்டன் சங்கம் ஒப்புக்கொண்டது. இலங்கையின வேண்டுகோளின் பெயரில் இந்தியாவில் 6 வாரங்களும் இலங்கையில் ஒரு வாரமும் விளையாட ஒப்புகொள்ளப்பட்டுள்ளது.

## மணவாளக் கோலம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சரவணை நாச்சிமார் கோவில் மனோன்மணியம்பாள் மணவாளக் கோலவிழா இன்று காலை 10-மணிக்கு விஷேச அபிஷேகங்களுடன் ஆரம்பமாகிறது. சைவப்புலவர் திரு, இ. செல்லத்துரை, திரு. மு. வைத்தியலிங்கம், பண்டிதர் இ. திருநாவுக்கரசு, பண்டிதர் வே. சோமசுந்தரம் ஆகியோர் 'அன்புநெறி', 'சைவ மக்கள் கடமை', 'சக்தி வழிபாடு', 'அபிராமியந்தாதி' ஆகிய தலைப்புகளில் விரிவுரைகளாற்றுவர்.

## பண்டித, புலவர்கள் மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

தமிழ் பண்டிதர்களினதும் புலவர்களினதும் பிரச்னைகளை ஆராயும்பொருட்டு கரவெட்டி வாணி கலைக்கழகத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நாளைக் காலை 10 மணியளவில் ஒரு கூட்டு மகாநாடு நடைபெறவிருக்கிறது. பல்வேறு பண்டிதர் சங்கங்களும், புலவர் சங்கங்களும் சேர்ந்து நடத்தும் இந்த கூட்டு மகாநாட்டில் பல பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள்.

## நான்முக சிவன் சிலை கண்டுபிடிப்பு

போபால், ஜூன் 26

நான்கு தலைகளைக் கொண்ட சிவனின் பிரம்மாண்டமான சிலை ஒன்று மத்திய பிரதேச ராஜ்யத்தில் ரேவாவிலிருந்து 15 மைல் தூரத்திலிருக்கும் மலைப்பகுதியிலுள்ள குர் கிராமத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

மணற்கற்பாறையினல் உருவாக்கப்பட்டுள்ள இச்சிலையின் உயரம் 28 1/2 அடியாகும்.

யாழ்ப்பாணம், வெள்ளி

உரும்பராய் கற்பகப்பிள்ளையார் தேர்முட்டி, வவனியா முன்னாள் எம். பி. திரு. செ. சுந்தரலிங்கத்தால் எதிர்வரும்திங்கட்கிழமைபகல் 12மணிக்குத் திறந்துவைக்கப்படும்.

தேர்க்கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள உண்டியலை திரு. எஸ். சி. தம்பிஐயா திறந்து வைப்பார்.

## 'பலவீனப்படுத்தக் கூடாது'

கொழும்பிலிருந்து புரக்டர் எஸ். சிவசுப்பிரமணியம் எழுதுவதாவது:-

தமிழ்பேசும்மக்களுடைய இன்றைய துரதிருஷ்டமான நிலை பற்றியும் அவர்களது விவகாரங்கள் பற்றியும் எவ்வாறு தமிழ் சமூகம் உணர்ந்துளதோ அதேவிதமாக தமிழரசுக்கட்சியின் செயற்குழு உணர்ந்துள்ளது. தமிழ்பேசும் மக்களிடையே ஒருவித ஏமாற்ற உணர்ச்சி நிலவி வருவதும் நன்கு தெரியக்கூடியதாக இருக்கிறது.

சமீபத்தில் தமிழரசுக்கட்சியின் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானமும் அதுபற்றித் தெரிவிக்கப்பட்ட விளக்கங்களும் மீண்டும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவையே. அவசியமானல் இத்தீர்மானங்கள் சில திருத்தி அமைக்கப்பட்டு தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் கொள்கையிலும்மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் தமிழ்சமூகத்தின் நன்மையையும் சிறந்த ராஜதந்திரத்தையும் கருதி இவ்வித மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும. தமிழர்கள் ஏற்கனவே பலவீனமுற்றிருக்கும் சமது நிலையை மேலும் பலவீனப்படுத்தக்கூடிய வகையில் எதுவும் செய்துவிடக் கூடாது.

கெய்ரோ, ஜூன் 26

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸரின் மூத்த மகள் ஹோடாவுக்கும் (வயது 16) சமீபத்தில் பொருளாதாரத் துறையில் பட்டம் பெற்ற இளைஞர் சாதிக் (வயது 22) என்பவருக்கும் திருமணம் செய்வதென்று நிச்சயிக்கப்பட்டுள்ளது. நிச்சயதார்த்தம் ஜூலை 2-ம் திகதி நடைபெறும்.


மகத்தான 6-வது வாரம்!

கிங்ஸ்லி வெலிங்டன் வெம்பிளி

(கொழும்பு) (யாழ்ப்பாணம்) (கண்டி)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி

நடிக்கும்



நானும் ஒரு பெண்

ஜூன் 26-ந் திகதி முதல்

கேப்பிட்டல் - பினாஸ

மற்றும் சினிமாஸ் திரைகளில்

கொஞ்சும் குமரி



REGAL — JAFFNA

NOW SHOWING

Daily 3 Shows. Sats & SunsFour

Robert Taylor

in

M. G. M's

GUNSof WYOMING

(East Man Colour)

# இந்திய பிரதமருக்கு சிறிமாவோ கடிதம்

## சேர்லி அமரசிங்கா கையளித்தார்

கொழும்பு, வெள்ளி

இலங்கை - இந்திய பிரச்னையை தீர்க்கும் பொருட்டு இரு நாட்டுப் பிரதமர்களும் விரைவில் சந்திக்கலாம் என நம்பப்படுகிறது.

இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இப்பிரச்னை குறித்து பேச்சு வார்த்தை நடத்த தாம் விருப்பம் கொண்டுள்ளதாக குறிப்பிட்டு இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் திரு. சேர்லி அமரசிங்கா மூலம் இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளார். இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி இதுகுறித்து பதில் அனுபபியதும் பேச்சு வார்த்தைக்கான திகதி தீர்மானிக்கபபடும்.

அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார ராஜாங்கமந்திரி திருமதி லக்ஷ்மிமேனன் இலங்கையிலிருந்து புதுடில்லி திரும்பும்வழியில் சென்னையில் இலங்கை, இந்திய பிரதமர்கள் ஆகஸ்டில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தலாம் எனத் தெரிவித்திருந்தார்.

இலங்கை, இந்திய பிரதமர்கள் உத்தியோக பூர்வமாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த முன்னர் அடுத்த மாதம் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ள லண்டன் செல்லும் சமயம் உத்தியோகபூர்வமற்ற முறையில் பிரச்னை குறித்து உரையாடுவார்கள் எனவும் நம்பபபடுகிறது.

—

## கற்பினுக் . : :

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்க எண்ணி, தனது விருப்பத்தை அவனுக்குத் தெரிவிக்கின்றான். அப்பொழுது அவன் கூறிய வார்த்தைகள் கணவருடைய புகழைக் காப்பதில் எவ்வளவு சிரத்தை கொண்டிருந்தாள் என்பதைக் காட்டுகின்றன.

"அன்றியும், பிறிது உள்ளது.
ஒன்று, ஆரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும்
வேறு இனி
நன்றி என்பது என்? வஞ்சித்த
நாய்களின்
நின்ற வஞ்சனை, நீயும்
நினைத்தியோ?

இராவணனைக் கொன்றபின் இராமர் பணித்தபடி விபீடணன் சீதையை இராமரிடம் சேர்ப்பிக்கின்றான். அப்பொழுது இராமர், தேவர் மானுடர் முதலியோர் அதிர்ச்சியடையும்படி, சீதையின் கற்புக்கு மாசு கற்பித்து, பேசத் தகாத வார்த்தைகளைப் பேசினான். அப்பொழுதும் சீதை தன்னையே நொந்தாளொழிய, இராமனை நொந்திலள். அக்கினியிற் புகுந்து தன் கற்பை நிலைநாட்டினள்.

ஈற்றில் சுவாமி விவேகானந்தர் சீதையைப்பற்றிக் கூறியதை எடுத்துக்காட்டி இக்கட்டுரையைமுடிப்பாம்.

"நல்லது என்று கருதக்கூடிய எதற்கும், தூயமை என்று எண்ணக்கூடிய எதற்கும், புனிதம் என்று போற்றக்கூடிய எதற்கும் உயர்பெண் தகைமை என்று பாராட்டக்கூடிய எதற்கும் சீதையின் பெயர் சான்றாய்த் திகழ்கின்றது. ஒரு பெண்ணை வாழ்த்துகின்ற அந்தணன், "சீதைபோல் இருப்பாயாக" என்று மொழிவான். ஒரு சேய்க்கு ஆசி கூறுகிற அந்த அந்தணனே "சீதையைப போல் விளங்குவாயாக" என்று செப்புவான். அவர்களனைவரும் சீதையின் சேய்கள்; சீதையைப்போலத் திகழ்வதற்கு முயல்கின்றார்கள். பொறைக்கு எல்லையாய், துயரின் உருவாய், கற்புக்கரசியாய், மாசில்லா இல்லறமங்கையாய்ச் சீதை காட்சியளிக்கின்றாள். அவள் எவ்வளவோ துயருற்றாலும், தன் கணவனை இராமனை கடிந்து ஒரு வெஞ்சொல்லும் கூறினாள் இல்லை. எல்லாம் கடமைகள் என்று ஏற்று, எல்லாவற்றையும் ஆற்றினாள்."

## இருநாட்டு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. கப்பூர் மேலும் பேசியதாவது:

இந்திய-இலங்கைச் சங்க அமைப்பாளர்கள் செய்துள்ள ஒழுங்குகள் மிகப் பிரமாதமானவை. இலங்கையின் பல பாகங்களிலும் இப்பகுதியிலும் எமது மதிப்பிற்குரிய பிரதமர் நேரு இறந்ததற்கு பல வழிகளிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது. இலங்கைப் பிரதமர் நேரு காலஞ்சென்ற செய்தி கிடைத்ததும் காலந்தாழ்த்தாது மரணச் சடங்கிற்குச் சென்று தமதும் இலங்கை மக்களினதும் அனுதாபத்தையும் தெரிவித்து மரியாதை செலுத்தினார். அவர் நேருவின் மரணச்சடங்கில் பேசிய பேச்சு யாவரையும் கவரக்கூடியதாகவிருந்தது.

உங்களுடைய மேயர் தமது பேச்சில் குறிப்பிட்டவை யாவற்றைவும் பற்றி எனது கருத்தைத் தெரிவிக்கமுடியாதவனாக இருக்கிறேன். ஆனால் இலங்கையில் பாஷைப் பிரச்னை திருப்திகரமாக முடியுமென்பதிலும் தமிழுக்கு உரிய அந்தஸ்து கிடைக்குமென்பதிலும் எனக்கு நம்பிக்கை உண்டு. இலங்கைக்கு வந்த இந்தியத் தலைவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்ய விருப்பமில்லாமல் விட்டதல்ல ஆனால் நடைமுறையில் உள்ள சில கஷ்டங்களினால் அவர்கள் வர இயலவில்லை.

இரு நாட்டு மக்களுக்குள்ளும் பிரச்னைகள் தோன்றியிருந்தாலும் அவற்றை இச்சங்கம் சுலபமாகத் தீர்க்கக்கூடியதாக இருக்கும். அதற்கான வழிவகைகளைக் காணுவதற்கு இந்தியத் தூதுவராலயம் இயலக்கூடியளவில் உதவுவார்கள் என்பதில் நம்பிக்கை வைக்கலாம்."

முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. சி. தனபாலசிங்கம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இருந்துவந்த தொடர்பு பலமடைய வேண்டியதை வற்புறுத்தி இந்தியாவின் எழுச்சியில்தான் இலங்கையின் எழுச்சியுண்டென்றும் இந்தியாவின் வீழ்ச்சியில் இலங்கையின் வீழ்ச்சியைத் தவிர்க்கமுடியாதென்றும்எடுத்துக் காட்டினார்.

தலைமையுரையில் திரு. ஹன்டி பேரின்பநாயகம் காந்தியும் நேருவும் அந்நிய ஆட்சியிலிருந்து விடுவிப்பதே சுதந்திரமென்று கொள்ளவில்லையென்றும், அதுவே மக்கள் திருபதிகரமான வாழ்க்கை நடத்த உதவுவதெனக் கொண்டனரென்றும், இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலுள்ள நட்புறவுகள் மேலும் மேலும் வளர இன்று ஸ்தாபிக்கப்பட்ட இந் நட்புறவுச் சங்கம் உதவுமென்பதில் ஐயமில்லையென்றும் குறிப்பிட்டார்.

## இரும்புத்திரை . . .

"இலங்கையர்கள் இந்தியாவுக்கு போவதற்கான விஷயத்தில் பல தொல்லைகளும், கஷ்டங்களும் ஏற்படுகின்றன. இப்படியான இரும்புத்திரைகள் கிழிக்கப்பட்டு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கல்வி, பொருளாதாரம், கலாச்சாரம் ஆகியவற்றில் நெருங்கிய தொடர்பு ஏற்பட வேண்டும். அதற்காக இவ் இலங்கை-இந்திய நட்புறவுச் சங்கம் உழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

"எந்த ஒரு காலத்திலும் எவ்வித தொடர்புமில்லாத நாடுகளுக்காக நட்புறவுக் கழகங்கள் ஆக்கிக் கொண்டிருக்கும் இந்நாட்களில் ஈழத்துடன் பல நூற்றாண்டுகளாக கல்வி, கலாச்சாரம், பொருளாதாரம் முதலியவற்றுடன் ஒன்றி இணைந்து பிணைந்து ஈழத்தின் வளர்ச்சிக்கு ஆக்கங்கள் தந்து கொண்டிருக்கும் பாரதத்துக்கும் நமக்குமிடையே ஒரு நட்புறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்."

முதலியார் சி. முத்துத்தம்பியாரும் பேசினார்.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. அம்பிகைபாகன் நன்றியுரை கூறினார். இதைத் தொடர்ந்து கதம்ப நிகழ்ச்சிகளும், நேருவின் வாழ்க்கைப் படக்காட்சியும் இடம் பெற்றன.

அதி வணக்கத்துக்குரிய எஸ். குலேந்திரனும் உரை நிகழ்த்தினார்.

— —

## இன்று நடை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழிவு நிகழ்த்துவார். அடுத்து 'நாவற்குழியூர் நடராஜன்' தலைமையில் நடைபெறும் கவியரங்கில் அல்வாயூர் மு. செல்லையா, செ. கதிரேசர்பிள்ளை, ச. வே. பஞ்சாட்சரம், பா. சத்தியசீலன், வித்துவான் சி. ஆறுமுகம் ஆகியோர் கலந்துகொள்வர்.

பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிகளுக்கு வித்துவான் பொன். முத்துக்குமாரன் தலைமை வகிப்பார். திரு. வி. க. ஆறுமுகம் குழுவினரின் 'வில்லுப்பாட்டு' நிகழ்ச்சியை அடுத்து பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி 'கம்பன் கவிநயம்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார். இதன்பின் 'கம்பன்' சஞ்சிகையை திரு. ச. அம்பிகைபாகன் வெளியிட்டுவைபபார். இரசிகமணி கனகசெந்திநாதன் ஆய்வுரை நிகழ்த்துவார்.

பிற்பகல் 3-40க்கு ஆரம்பமாகும் பட்டிமண்டபத்தில் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், திரு. ஆ. கலியாணசுந்தரேசன், புலவர் சி. செ. சோமசுந்தரம், திரு. க. சிவராமலிங்கம், பண்டித வித்துவான் க. கு. நடராஜன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இரவு நிகழ்ச்சிகள் வித்தியாலயத் திறந்தவெளியரங்கில் கலையரசு சொர்ணலிங்கம் தலைமையில் நடைபெறும். பாராட்டு, பட்டமளிபபு, பரிசளிப்பு ஆகிய நிகழ்ச்சிகளின் பின் 'செவிநுகர் கனிகள்' என்ற நிகழ்ச்சி நடைபெறும். அரியாலை நாடக மன்றத்தின் 'விதியின் பிழை' என்ற நாடகத்துடன் விழா முடிவடையும்.

## காணவில்லை

செ. நகுலகுல்ராசா 16 வயதுடையவர். கறுப்பு நிறம், சுமார் 5 அடி உயரம் அரும்பு மீசை உள்ளவர். வலக்கைப் பெருவிரலில் ஓர் பழைய காயம் உண்டு. அவரைக் கண்டால் அயலில் உள்ள பொலீஸ் நிலையத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். 547

# "இந்தியாவே வழிகாட்டி"

—மேயர்

மேயர் துரைராசா தமது வரவேற்புரையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

இலங்கையின் பிரதான தேசிய இனங்களாகவிளங்கும் தமிழ்பேசும் மக்களும், சிங்கள மக்களும் பாரத நாட்டில் இருந்து வந்தவர்கள் தான் என வரலாறு கூறுகின்றது. தமிழ்பேசும் மக்கள் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்து மக்களைப் பொறுத்தவரையில் இன்னமும் அவர்கள் இந்தியாவையே தம் தாய்நாடாகப் போற்றுகிறார்கள்.

சமய அடிபபடையிலும் கூட இந்துசமயமும், பௌத்தசமயமும் தாய்நாட்டிலிருந்து இங்கு பரம்பியவையே. அதுமட்டுமா? இந்தியாவில் முகலாயர் ஆட்சியேற்பட்ட காலத்தில் இருந்து இஸ்லாமிய மதமும், இஸ்லாமிய கலாச்சாரமும் இங்கும் பரவுவதாயிற்று. தென்னிந்தியத் திருச்சபை என்ற பெயரால் இங்கு ஒரு சபை இயங்கி வருவதானது கிறிஸ்தவ மதத்திற்கும் இந்தியா தன் பங்கைச் செலுத்தியுள்ளதென்பதற்கு போதிய எடுத்துக்காட்டாகும்.

பல மொழிகள் பேசபபடும் இந்திய நாட்டிலே முக்கியமான பதினான்கு மொழிகளைத் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொள்ளுகிறது. இந்திய அரசியல் திட்டம். இபபதினான்கு மொழிகளும் பிரதேச அரசாங்க மொழிகளாக விளங்கி வருகையில் இரண்டே இரண்டு தேசிய மொழிகளையுடைய இலங்கையில் தமிழுக்கு உரிய அரசாங்க அந்தஸ்துக்காக நாம் போராடவேண்டியவர்களாகவுள்ளோம். இலங்கை இந்திய நட்புறவுச் சங்கம் நம் அயல் நாடான இந்தியா தனது இனபபிரச்னைகளை வெற்றிகரமாகத் தீர்பபதில் அடைந்த அனுபவங்களால் எமக்கும் பயன் ஏற்படும்படி செய்யவேண்டும்.

### இந்திய வம்சாவழி மக்களின் உரிமை

இலங்கையின் தேசிய மொழிகளுள் ஒன்றான தமிழ் மொழியைத் தம் தாய்ப் பாஷையாக கொண்டிருந்தும், இங்கு வாழும் இந்திய வம்சாவழியினருக்கு குடியுரிமை வழங்கப்படாதிருக்கும் காரணத்தின் மர்மத்தை என்னால் புரிந்து கொள்ளக்கூடவில்லை. வேற்று நாட்டை தம் தாய்நாடாகக் கொள்ள விரும்பும் எம் மக்களும் அந்நாட்டினத்தவருடன் இரண்டறக் கலந்து ஒன்றுபட வேண்டுமென்பதை ஓரளவு ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் இயற்கையாகவே இங்குள்ள தேசிய சிறுபான்மையினருடன் இன, மொழி, கலாச்சார அடிப்படையில் ஒன்றிவிட்ட மலைநாட்டுத் தமிழ் மக்களை நாட்டின் பெரும்பான்மை மக்களுடன் இரண்டறக்கலக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதில் எவ்வித நியாயத்தையும் காணமுடியவில்லை. தமிழ் பேசுவோர் இந்நாட்டின் தேசிய சிறுபான்மையினர் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாயின், இயற்கையாகவே இம்மக்களுடன் இரண்டறக் கலந்து நிற்கும் இம்மக்களுக்கு அடிபபடை மனித உரிமைகளை மறுக்க எவருக்கும் அதிகாரம் கிடையாது. அதிலும் குறிபபாக ஐ. நா. தாபன அங்கத்துவ நாடான இலங்கை அபபடிச் செய்வது முற்றிலும் தவறாகும். இலங்கை இந்திய நட்புறவு மேலோங்குவதற்கு இச்சூழ்நிலை ஏற்றதல்ல.

இன்று இங்கு ஆரம்பிக்கப்படும் இலங்கை-இந்திய நட்புறவுச் சங்கம் வெறும் கானல் நீராகவிராது உண்மையாகத் தொழில்பட வேண்டுமாயின் இங்கு குறிப்பிட்டவற்றில் உரிமைகளை ஆராய்ந்து சம்பந்தப்பட்ட அரசாங்கங்களுக்கும், மக்களுக்கும் உண்மை நிலையைத் தெளிவாக்க வேண்டும், அடுத்தது காட்டும் பளிங்குபோல் துலாம்பரமாக எடுத்துக்காட்ட வேண்டும். அல்லாவிட்டால் இந்தஸ்தாபனம் நவராத்திரி கொலுவில் இட்ட வெறும் பொம்மையாக மட்டுமே விளங்கும்.

சுவாமி விவேகானந்தரின் கற்பனை இந்தியாவை நடைமுறையில் சாத்தியமாக்கித் தாமே இந்தியாவாக மாறிவிட்ட நேருவின் இந்தியாவுடன் எமக்குள்ள உறவை வலுப்படுத்தவும் மேலும் மேலும் வளர்க்கவும் "இலங்கை-இந்திய நட்புறவுச் சங்கம்" எமக்கு உதவ வேண்டும்.

## பொலிஸ்-இராணுவ கைகலப்பு

கொழும்பு, வெள்ளி

அம்பாறையில் பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகளிலிருந்து தெரிய வருகிறது.

அம்பாறையிலுள்ள கோட்டல் ஒன்றின் ஊழியர் சிலருக்கும் இராணுவ சிப்பாய்கள் சிலருக்குமிடையில் ஏற்பட்ட தகராற்றைத் தீர்த்து வைப்பதற்காக கோட்டல் முதலாளி பொலிசாரை அழைத்தார். இதைத் தொடர்ந்து பொலிசாருக்கும் இராணுவத்தினருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது.

தென் மாகாண உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர்ஜெனரல் திரு. ஈ. ஜெயக்கொடி இதுபற்றி விசாரணை நடத்துவதற்காக கல்லோயா சென்றுள்ளார்.

இக் கைகலப்பில் பொலிஸ் வாகனம் ஒன்று உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது. பன்னிரண்டு பேர்கள் இது சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

—

## அஞ்சல் எழுதுவினைஞர் சங்க கூட்டம்

### இன்று நடைபெறுகிறது

கொழும்பு, சனி

அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு பொதுக்கூட்டம் இன்று காலை 9-30 க்கு வெள்ளவத்தையிலுள்ள நாவலர் கழக மண்டபத்தில் நடைபெறுகிறது. இக் கூட்டத்தில் பல பிரேரணைகள் கொண்டுவரப்படவிருக்கின்றன.

தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் கூட்டம் என்று நேற்றைய பத்திரிகையில் வெளியானது தவறு. அஞ்சல் எழுதுவினைஞர் சங்க கூட்டம் என்றிருக்கவேண்டும்.

## தேசிய சுவீப் முடிவுகள்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதற்பரிசு:
07 V 0689 ரூபா 50,000

இரண்டாவது பரிசு:
01 B 0336 ரூபா 16,000

மூன்றாவது பரிசு:
05 Y 0152 ரூபா 6,310

—

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அருள் செய்யும் கருணையை நினைத்து நினைத்து, இலங்கையிலே வாழ்வதும் நல்லதே என்ற மனநிறைவுடன் வீடு திரும்பினேன்.

* * *

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும், பனித்தசடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும், இனித்தமுடையஎடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால், மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே.

— திருநாவுக்கரசர்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனதாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.